
பதிவுஎண் 2041 | தனிப்பிரதி விலை அணா ஒன்று





**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1–12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |


நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.


பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ஹு மார்கழி-மீ" சு-உ (20—12—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் ருரு

மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர். போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—

என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கை நூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## பிராமணர்-பிராமணர் அல்லாதார் வகுப்புவாரி உரிமை, காங்கிரசுக்கு புதிதா?

சென்ற நவம்பர் 21-22-உயில் காஞ்சியில் கூடியமாகாண மகாநாட்டில் அன்பர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கொண்டுவந்தவகுப்புவாரிபிரதிநிதித்வ கொள்கையைப் பற்றி பல பிராமண தலைவர்களும் பத்திரிக்கைகளும், இக்கொள்கையை நாயக்கர் முதலியவர்கள் புதிதாய் மகாநாட்டில் சென்று புகுத்தி பிளவு படுத்துவதாக, பேசியும், எழுதியும் வருகிறார்கள். இவர்கள் யாவரும் ஆதியில் இக்கொள்கையை ஆதரித்ததும், கான்பரன்ஸ்களும், மாகாணகமிட்டிகளும் ஒப்புக்கொண்ட பழமையான சங்கதியுமே தவிர, புதிய சங்கதி அல்ல என்பதை பல பழைய தீர்மானங்களிலிருந்தும் பிரசங்கங்களிலுமிருந்தும் கீழே விளக்கிக்காட்டுகிறேன்.

இதைக்கொண்டு நண்பர் ராமசாமி நாயக்கர் கொண்டுள்ள தீர்மானம் வகுப்பு துவேஷத்தைக் கிளப்புகிறதா அல்லது அதை எதிர்த்து சுயநன்மைநாடி கட்சி செய்கிறவர்கள் ஜாதிதுவேஷம் கிளப்புகிறார்களா? என்பதை முடிவுசெய்துகொள்ள விட்டுவிடுகிறேன். ஜஸ்டிஸ் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் அதற்குப் போட்டியாக 1918-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 17-ந்தேதியில் சென்னை மாகாணசங்கம் என்று ஒரு தேசிய பிராமணரல்லாதார் சங்கம் கண்டு, அதன் மூலம் காங்கிரஸ் கொள்கை வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் முதலியவை வற்புறுத்தப்பட்டன. பின் ஸ்ரீமான். சி. ராஜகோபாலாச்சாரியார், டி. பிரகாசம் காரியதரிசிகளாயும், சி. விஜயராகவாச்சாரியார் தலைவராகவும் கொண்ட தேசிய கட்சியார் 1920-ம்வருஷம் ஏப்ரல்மாதம் 16, 17, 18, 19 தேதிகளில் கூடி சங்கத்தின் விதிகளை வெளியிட்ட அறிக்கையில், 2-வது பாராவில் பிராமணரல்லாதவர்கள் 50 வீதம் குறையாத ஸ்தானங்களை அடையும்படி செய்யவேணுமாய்த் தீர்மானித்தார்கள். அதே காலத்தில் கூடிய மாகாண காங்கிரஸ் கமிட்டியார்களும் அவ்விதமே தீர்மானித்துள்ளார்கள். இதனை அப்படியே, திருநெல்வேலியில் கூடிய மாகாண கான்பரன்ஸ் மூன்றாவது தீர்மானமாக மேற்படி அறிக்கையை ஒப்புக்கொண்டதல்லாமல், கடைசியாக ஸ்ரீமான். வி. ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் வகுப்பு ஓட்டர்கள் தொகைப்படி உரிமைப் படுத்த வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் சில எதிர்ப்புகளால் மேற்கண்ட விதம் திருத்தித்தீர்மானிக்கப்பட்டது. இதைத் திரும்பவும் மைலாப்பூர் ஸ்ரீனிவாசய்யங்கார் 7—8—20-ல் பாபநாசத்தில் கூடிய தஞ்சை ஜில்லா மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசிய முகவுரை பிரசங்கத்தில் கீழ்காணும் விதமாய் பேசினார்:—

திருநெல்வேலியில் கூடிய மாகாண மகாநாட்டில் பிராமணர்களைவிட பிராமணரல்லாதவர்கள்தான் தொகையில் அதிகமானவர்கள், அதன் உபசரணைத் தலைவர் பிராமணரல்லாதவர், அதன் காரியதரிசிகள் மூவரில் இருவர் பிராமணரல்லாதவர்கள்; உத்தியோகங்களில் பிராமணரல்லாதவர்கள் தகுந்த அளவு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்றும், சட்டசபையில் ஸ்தானம் பெறுகிறதற்காக பிராமணரல்லாதாரில் காங்கிரசை அனுசரித்தவர்களைக் கூடுமானவரையில் ஆதரிக்கிறது என்றும், அந்த மகாநாடு தீர்மானத்திலிருந்து காங்கிரஸ் கட்சி மகாஜன கட்சி என்று ஸ்ரீனிவாசய்யங்கார் மொழிந்தார். அதேமகாநாட்டில் ஸ்ரீமான்கள். நா. வி. கல்யாணசுந்தரன், வி. பி. பக்கிரிசாமி பிள்ளை முதலியவர்களால் ஓட்டர் சங்கிகைக்குத் தகுந்தளவு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் ஆதரிக்கவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம், புரசை ஸ்ரீமான். சத்தியமூர்த்தியால் திருத்தி திருநெல்வேலி தீர்மானத்தை ஆதரித்து 50 வீதம் குறையாத என்று தீர்மானம் நிறைவேறியது. இது நீங்க, சென்னை மாகாணசங்கம் கான்பரன்ஸ்கள், சென்னை, தஞ்சை, ஈரோடு, முதலிய இடங்களில் கூடி வகுப்புவாரி கொள்கையை வற்புறுத்தின. கூட்டுக்கமிட்டி முன் சாக்ஷியம் கூற பிரதிநிதிகளை அனுப்பி வற்புறுத்தியதுடன் மெஸ்டன் கமிஷனிலும் இதை வற்புறுத்திற்று. இவ்விதம் எல்லாம் ஏற்கனவே கையாண்டு வகுப்புவாரி கொள்கை நிர்ணயிக்கப்பட்டிருக்கையில் ஒத்துழையாமை தோன்றி தேசியபோர் மும்முரமாக நடக்கையில் உள் சண்டைக்கு இடமில்லாது போயிற்று. ஆனாலும், ஒவ்வொரு மாகாண மகாநாட்டுடனும், தேசிய பிராமணரல்லாதார் கூட்டம் நடந்து கொண்டுதான் வந்திருக்கிறது. அப்படியிருந்தும் ஒத்துழையாமை மறைந்து, பழைய காங்கிரஸ் கொள்கையை மாற்றுப் பெயருடன் இப்பொழுது ஆரம்பித்திருப்பதால், பழைய கொள்கைகளுக்கும், தீர்மானங்களுக்கும் இனி காங்கிரஸ் கட்டுப்படவேண்டியதே யொழிய, தீர்மானங்களை சம்பிரதாயமாக புதிய மகாநாடுகள் தீர்மானிக்க வேண்டியதோ, அன்றி அதை ரத்துசெய்யவோ வேண்டும். இரண்டுமில்லாமற்போவது எந்த ஒழுங்கைக்கொண்டு என்பது தெரியவில்லை. இவ்விதம் கமிட்டிகளும், மகாநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ள ஒரு கொள்கையை வற்புறுத்தினால் அதைக்கொண்டு வருகிறவர்கள் வகுப்பு துவேஷியா? அல்லது ஒரு வகுப்பாரின் நன்மைக்காக ஏற்கனவே ஒப்புக்கொண்டதை எதிர்ப்பது ஜாதிப்பகைமையல்லவா என்று கேட்கிறேன்.

மேலும் பேரளத்தில் கூடிய வடதஞ்சை மகாநாட்டில் ஸ்ரீமான். டி. வி. வெங்கிடராமய்யர் தலைமைபிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி பிராமணர்-பிராமணரல்லாதார் சச்சரவு இன்று ஏற்பட்டுள்ளதல்ல. பார்ப்பனர்கள் இன்னாட்டில் குடியேறி தங்கள் ஒரு தலை வேதங்களை பரவச்செய்த காலமுதல் உள்ளது. இதற்கு பிராமணர்களே குருவாகவும், மடாதிபதிகளாகவும் இருப்பதைக் கண்டிப்பதன் அறிகுறியாகவே தஞ்சை ஜில்லாவில் பல சைவமடாலயங்கள் தோன்றியுள்ளன. இப்படி எல்லாமிருக்க இன்று அதிகார கோஷ்டியிலும் சபைகளிலும் சொல்ப தொகையினரான பார்ப்பனர்கள் ஆதிக்கம் வகிப்பதை எவரும் விரும்பாமல் அதிக தொகையினர் ஆதிக்கம் வகிக்க முயற்சிப்பது எவ்விதத்திலும் நியாயமற்றது ஆகாது. இதனைச் சொல்லும்போதும் சரி, வேறு எந்த காரியத்திற்கு எடுத்தாலும் சரி, சிலதலைவர் என்னும் சூட்சிக்காரர்கள், சுயராஜ்யத்திற்குவிரோதம், மதத்திற்கு விரோதம் என்னும் பாட்டைப் பாடுகிறார்கள். இவ்விதம் சொல்லுவதெல்லாம் மகா ஜனங்களை ஏமாற்றவே தவிர, உண்மையில் இவர்கள் தேசத்தை பிளவுபடுத்தாமல் உயரிய சுயராஜ்யத்தை அடையப்பாடுபடுவதாயின், வெகுகாலமாய் உள்ள கொள்கையை ஒருவராலும் கொல்ல முடியாது. அது இருந்தும், வலுத்தும் தான் தீரும். சிலர் சுயராஜ்யம் பெற்று அப்பால் இவைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். சுயராஜ்யம் பெற்றபின் ஒழுங்கான நிர்வாகம் என்று பேர் வாங்குவது உசிதமா? அல்லது உள்வைத்து ஆறினதாக பாசாங்கு செய்து சுயராஜ்யம் பெற்றபின் ஒருவருக்கு ஒருவர் சண்டையிட்டு நிர்வாகம் ஊழல்பட்டு கெட்டபெயர் சம்பாதிப்பது மேலா என்று கேட்கிறேன்.

சிலர் சுயராஜ்யம் பெற்றவுடன் நாம் பெருவாரியானவர்கள்; அப்படி இருக்க பிராமணரைக்கண்டு பயம்கொள்ள தேவை இல்லை, என்கிறார்கள். இவர்கள் கொள்கையைக் கைக்கொண்டால் பின் உள்நாட்டு கலகம் முதலியவைகள் தோன்றி, பெற்ற சுயராஜ்யத்திற்கு உலைவைத்தவர்களுக்கு ஒப்பாவோம். ஆனதால் அன்பர்களே, தோழர்களே, நாம் ஸ்தாபிக்க போகும் சுயராஜ்யத்திற்கு தேசத்தை ஒற்றுமையான நாடாக செய்ய வேண்டுமானால், மகமதியர்களுக்கும் சீக்கியர்களுக்கும், பார்சிகளுக்கும், கிருஸ்தவர்களுக்கும் ஸ்தானங்கள் அரசாங்கத்தில் ஒதுக்கப்பட்டது போல், ஹிந்து தொகுதியில் பிராமணரல்லாதார், பிராமணர், தீண்டாதார் என்றவகுப்பாய் பிரித்து அவரவர்களின் ஜாதி ஜன சங்கியைக்கு தக்கபடி ஸ்தானங்களையும் அரசாங்க உத்தியோகங்களையும் நிர்ணயித்து விட்டாலல்லாது ஒற்றுமை சாத்தியப்படாது என்பதை நிச்சயம் நம்பவேண்டும். இந்தக் கூட்டத்தில் இரண்டு தலைவர்களை தம் வயப்படுத்திக்கொண்டதால் அக்கிளர்ச்சியோ, கொள்கையே செத்துவிட்டதாக எண்ணவேண்டாம். இதே காஞ்சியில், தனித்து நின்ற சத்தியமூர்த்தி இன்று பெருவாரியாகவில்லையா? மிதவாதிகளை வயப்படுத்திக்கொண்டால் தேசீய இயக்கம் நின்றுவிடும் என்று எண்ணிய அதிகாரவர்க்கத்தைப்போலும், சற்று கண்களை மூடிக்கொண்டு உகைமே தூங்கிவிட்டதாக எண்ணிபாலைக்குடிக்கும் பூனைபோலும் சிலரைத் தன் வயப்படுத்திக்கொண்டதால் இதனை அழித்து விட்டதாக நினைப்பது அறிவில்லாத தன்மையேயாகும். மேலும் வகுப்புவாரி கொள்கையை விவரிக்கையில் அரசாங்க உத்தியோகத்தை நிர்ணயிக்க வேண்டுமென்றதைக்கொண்டு பலர் உத்தியோக ஆசை என்று பறை சாற்றக்கூடும். அதற்கு நான் எந்தக்கக்ஷிக்குதான் உத்தியோக ஆசைஇல்லை என்று கேட்கிறேன். சுயரா

ஜ்யசக்ஷி தலைவரும், காரியதரிசியும், உறவினருக்கும் தன் பிள்ளைக்கும் உத்தியோகம் சம்பாதித்துக்கொடுக்கவில்லையா? பலர் சட்டசபை தலைவராகவில்லையா? கமிட்டிகளில் ஸ்தானம் வகிக்கவில்லையா? இன்னும், ஒருவர் ஓட்டர்களை ஏமாற்ற சட்டசபை அங்கத்தினர் பதவியையும், ஸ்கீன் கமிட்டி அங்கத்தினர் பதவியையும் ராஜிநாமா செய்ய யோசித்துக்கொண்டிருப்பதாக சொல்லி ஓட்டர்களை ஏமாற்றி பிரசாரம் செய்துகொண்டு வரவில்லையா? ராஜிநாமா செய்ய பேனாவும் கடிதமும் அகப்படவில்லையா? இந்த பதவிகள் வேண்டியதில்லையானால் யோசனை என்ன? தாம்பே உத்தியோகம் ஏற்றுக்கொண்டவுடன் அவரை ஆதரித்து, பலர் பேசவில்லையா? இதைக் கேட்டால் புரட்சிக்காரன் என்கிறார்கள். இன்னும் ராஜப்பிரதிநிதியை வரவேற்கமறுத்தவர் 5000, 6000 சம்பளம் என்றவுடன் தினம்பத்துத் தடவை பார்க்கவேண்டியதாக போய்விட்டது இவர்கள் தானா உத்தியோக ஆசை இல்லாதவர்கள்? தாம்பேயை நாகபுரியில் கண்டித்த சுயராஜ்யக்கட்சியார், சென்னையில் தபால் தந்தி டைரக்டரைக் கௌரவிக்க காரியதரிசியும் ஒரு அங்கத்தினரும் சென்றதை ஏன் கண்டிக்கவில்லை? ஸ்ரீமான்.எஸ். ஆர். தாஸருக்குக் கிடைத்த உத்தியோகத்திற்காக அவரைப் பாராட்டி விருந்துண்ட சென்குப்தாவை யார் கண்டித்தார்கள்? சென்னை சட்டசபையில் அதிகாரிகளின் ஒழுங்கீனங்களை கண்டிக்கவந்த தீர்மானத்தை எதிர்த்து அதிகாரிகளுக்குப் பரிந்து பேசிய சுயராஜ்யக்கட்சி அங்கத்தினர்களை யாராவது கண்டித்தார்களா? இதெல்லாம் அவர்களின் உத்தியோக ஆசையை வெளிப்படுத்துகையில் ஏன், நாம், உத்தியோகத்திற்கு ஆசை படலாகாது என்று கேட்கிறேன்? இவ்விதம் பிராமணரல்லாதாரின் விரோதிகளான ஒரு கூட்டத்தார் செய்யும் காரியங்களானது, நம்முடைய உணர்ச்சியை அதிகரிக்கச்செய்கிறது என்பதில் தடையில்லை.

இதில் இன்னும் பரம ஒத்துழையாதாராகவும் ஆசார சீர்திருத்தக்காரராகவும், மகாத்மாகாந்தியின் சிஷ்யராகவும் கொஞ்சகாலம் ஆக்டிங் காந்தியாகவும் விளங்கிய ஒருவர், மகாத்மாவின் ஜாதீய ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் தன்மை முதலியவற்றை விட்டு விட்டு பிராமணர் அல்லாதவர்களுக்கு விரோதமாக பொய்மான் வேட்டை என்று கிளம்பிவிட்டார். இவர் தனது வசனத்தை மெய்ப்பிக்க ராமாயணத்தின் வாசகத்தைக் கொண்டுள்ளார். பல அறிவாளர்களும், ஆராய்ச்சிக்காரர்களும் ராமாயண சூட்சியானது பார்ப்பனர் கைக்கொண்டு, திராவிடருக்கு இழைத்த அநீதியென சொல்லிக்கொண்டு இருக்கையில், அதைக் கையாண்டவர் மகாத்மாவின் சிஷ்யரானாலும் ஆசார சீர்திருத்தக்காரரானாலும், பிராமணரல்லாதவர்களிடம் உள்ள துவேஷபுத்தி நீங்காமலிருப்பதால், இவர் மகாத்மாவின் சிஷ்யராகுவாரா என்று வினவுகிறேன். இன்னும் ரகசியமாக அறிந்ததில், பிராமணர் அல்லாதவர்களுக்கு விரோதமாக

## பிராமணரல்லாதார் இனிஎன்ன செய்யவேண்டும்?

"குடி அரசு" ஆசிரியர் அவர்கட்கு

ஐயா,

---

நாளது மீ 21-ந் தேதியன்று வெளிவிடலான தங்களுடைய பத்திரிகையில் "ஆதிமுதற்கொண்டே சூழ்ச்சி" என்னும் தலைப்பின்கீழ், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவக் கிளர்ச்சி அநேக ஆண்டுகளாக கேட்கப்பட்டுவருவது விளக்கப்பட்டிருக்கிறது. தென் இந்தியா நல உரிமை கூட்டுறவு சங்கம் (South Indian Liberal Federation) என்ற பேரால் பிராமணரல்லாதாருடைய இயக்கம் கிளம்பியபோது, அக்கிளர்ச்சியைக் கெடுப்பதற்காக அநேக சூழ்ச்சிகள் செய்யப்பட்டுவந்தன. சுயராஜ்யம் வேண்டாமென்று இச்சங்கத்துப் பிராமணரல்லாதார் சொல்லுவதாகவும், சுயராஜ்யம் வேண்டுமென்றும் அதற்குப்பின் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கொடுத்தாலும் சரி; கொடுக்காவிட்டாலும் சரி; யென்று அச்சங்கத்துக்குப் போட்டியாக சென்னை மகாண சங்கம் என்கிற பேரால் ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இச்சங்கங்களுடைய நோக்கங்கள் தெளிவாக பிரசாரங்களால் நடத்தப்படாமல்—நடத்தப்படவொட்டாமல் போயின. சுயராஜ்யம் அடைவதற்குமுன் தேசம் சீர்திருந்தவேண்டியவழிகளை, டாக்டர். நாயர் அவர்கள்

---

சட்ட இலாகாபவமாய்மைலாப் பூர் கோஷ்டிக்கு ஆதரவளிப்பதாகத் தெரியவருகிறது. இப்படி எல்லாம் பிராமணர்கள் மற்ற விஷயங்களில், அபிப்பிராய பேதம் கொண்டாலும், பிராமணரல்லாதாரை அழுத்தும் வேலையில் ஒற்றுமைப்பட்டு வேலை செய்கிறார்கள் என்பதை இன்னும் எவ்வளவோ உதாரணங்களால் விளக்கிக் காட்டலாம். இருந்தாலும், அந்த வேலையை நிறுத்தி, இனி நாம் செய்யவேண்டிய வேலையைக் கொஞ்சம் சொல்லி முடித்துவிடுகிறேன். பிராமணரல்லாதாராகிய நாம் தற்காலம் பல கக்ஷிகளாய் இருந்து வருகிறோம். பலர் ஜஸ்டிஸ் கட்சியையும், சிலர் காங்கிரஸ் கட்சியையும், சிலர் சுயராஜ்யக் கட்சியிலும், சிலர் சுயேச்சைக் கட்சியிலும், சிலர் மிதவாத கட்சி, பெசண்ட் கட்சி, தனிக்கட்சி முதலியவைகளாய்ப் பிரிந்து இருந்தபோதிலும், ஒவ்வொரு கட்சியிலும் பார்ப்பனர்களும் இதைப் போலிருக்கிறார்கள். நம்மை நசுக்க எத்தனிக்கையில் யாவரும் ஒன்று கூடுவது போல், நாம் நமது ஜீவாதார சுதந்திரங்களுக்கும் பிராமணரை, எதிர்த்து சகல ஸ்தானங்களையும் நாம் கைப்பற்ற தக்க கூட்டுறவு முயற்சியில், தக்க முயற்சிசெய்து அடுத்துவரும் சட்டசபையில் சகல ஸ்தானங்களும் பிராமணரல்லாதாரே அடைய முயற்சி செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். நண்பர்களே ஏமாறாதீர்கள், சூட்சி பிரசாரம் அதிகமாய் நடைபெறுகிறது. எழுங்கள்! விழித்தெழுங்கள்!

என். வி. கலியாண சுந்தரன்.

---

ஜஸ்டிஸ்பத்திரிகையின் வாயிலாய் 9பெரும் வியாசங்கள் எழுதியிருப்பது நாம் மறக்கத்தக்கதன்று. உண்மையில் நோக்குங்கால், இவ்விரண்டு சங்கங்களும் வகுப்புவாரிபிரதிநிதித்வத்தைப்பற்றி போராடி வந்தனவென்று நன்கு விளங்கும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாவிடில், சுயராஜ்யம் வேண்டியதில்லையென்றும், சீர்திருத்தப் பட்டசபைகளை (Reformed Councils) வேண்டியதில்லையென்றும், ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதார் போர்புரிந்தது ஞாபகத்தில் இருக்கலாம். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ள பிராமணரல்லாதார் தங்களோடு சேர்ந்துள்ள பிராமணர்களின் செய்கைகளையும், கருத்துகளையும் தெரிந்துகொண்டவர்களாகி, மற்ற இந்தியர்களைப் போன்று தங்களுக்கும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ சுதந்தரத்தை அளிக்க காங்கிரஸ் மகாநாட்டில் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று ராஜீய மாகாண மகாநாடு கூட்டங்களில் விடாமுயற்சியுடனும், ஊக்கத்துடனும், பத்திராசிரியரும், மற்ற முக்கியஸ்தர்களும் பாடுபட்டும், நாளது வரைக்கும் பயன்படாமல் போனது மிகவும் விசனிக்கத்தக்கது. காஞ்சீபுரத்தில் நடந்த ராஜீய மாகாண மகாநாட்டில் ஸ்ரீமான், ஈ. வெ ராமசாமி நாயக்கரவர்கள், பெருமுயற்சியுடன் கொண்டுவந்த இந்த பிரேரேபனையை இந்நாட்டில் தலைமை வகித்திருந்த ஒரு பிராமணரல்லாதார் வீழ்த்திவிட்டாரென்றால், பிராமண சூட்சியின் திறத்தையும், பிராமணரல்லாதாருடைய பரிதாப நிலைமையும் நினைக்க நினைக்க மனதிற்கு பெரிய வருத்தமுண்டாகிறது. இதற்கு நாம் செய்யவேண்டுவதென்ன? இதை நன்றாய் யோசித்த ஒருசரியானவழியைக் காட்டி பிராமணரல்லாதார் முன்னேற்றமடையச் செய்வார்களேயானால், வகுப்புவாரி வேற்றுமைகளிருப்பினும் தேசீய விடயத்தில்ஒற்றுமையுடன் உழைத்து சுயராஜ்ய சாம்ராஜ்யத்தை பெற்று உன்னத பதவியை அடைவார்கள் என்று நம்புகிறேன்.

(1) ஆக, நமது முன்னேற்றத்திற்காக காங்கிரஸ் சபைகளில் சேர்ந்து இன்னம் அதிக முமுரமாய்வேலை செய்து வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொள்ள செய்வதா? (2) இப்போது அடங்கியுள்ள சென்னை மாகாண சங்கத்தை பிராமணர்களுடைய சம்பந்தமன்றி உயிர்ப்பிப்பதா? (3) அல்லது ஜஸ்டிஸ் கக்ஷியைப் பலப்படுத்துவதா? (4) அல்லது, இப்போது அமராவதியில் கூடப்போகும் அகில இந்தியா பிராமணரல்லாதார் காங்கிரஸ்கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தி முன்னேற்றம் அடைவதா?

இந்த சங்கதியை தங்களுடைய பரந்த பத்திரிகையில் பிரசுரம் செய்தும், பிராமணரல்லாதாரில் முக்கியஸ்தருடைய வியாசங்களையும் வரவழைத்தும் வெளியாக்குவீர்களென்று மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

ச. ந. செ.

## ஒரு பிராமண வக்கீலுக்குச் சிறை வாசம்

சென்னையில் ஐகோர்ட் வக்கீலாயிருந்த ஸ்ரீமான். எம். ஆர். சுந்தரம் ஐயர் என்பார், ஸ்ரீமான். குப்புசாமி கிராமணி என்பவரிடம், விஜயநகரம் மகா ராஜாவுக்கு சொந்தமான மயிலாப்பூரில் உள்ள, ஒரு தென்னந்தோப்பைக் கள்ளுக்குத்தகைக்குச் சிபார்சு செய்து வாங்கிக்கொடுப்பதாகச் சொல்லி, முன்பணமாக ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டார். பலமாதங்களாகியும் குத்தகை கிடைக்கவில்லை. ராஜா தமது மரங்களில் கள் இறக்கக்கூடாதென்று சென்ற வருஷத்திலேயே நிறுத்திவிட்டார். கடைசியாக கிராமணியார், பணத்தைத் திருப்பிக்கேட்டபொழுது வக்கீல், பி. அண்டு ஓ. பாங்கிக்கு ஆயிரம் ரூபாய்க்கு உண்டியல் கொடுத்தார். ஆனால், பாங்கியில் அவருக்குப்பணம் இல்லை. கிராமணியாரை ஏமாற்றியதாகவும், பணத்தை மோசஞ்செய்ததாயும் அவர்மீது வழக்கு ஏற்பட்டது. எழும்பூர் தலைமை ராஜதானி நீதிபதி ஸ்ரீமான். பண்டலே ஏமாற்றியதற்குப் போதுமான ஆதாரமில்லையென்று கூறிப் பணத்தை மோசஞ்செய்த குற்றத்திற்காக ஆறுமாதங் கடுங்காவல் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார். அபராதம் செலுத்தினால் அந்தத் தொகை கிராமணியாருக்குச் சேரவேண்டும். இந்தக் குற்றத்திற்கு அதிக தண்டனை விதிக்கலாமாயினும், குற்றவாளியின் குடும்பத்தாரின் நலத்தைக்கருதிக் குறைந்த தண்டனை விதிப்பதாக நியாயாதிபதி கூறினார்.

இந்த சுந்தரம் ஐயர் பத்து வருடங்களுக்குமுன் சென்னை அரசாங்கத்தாரால், கௌரவ சீலராகக் கருதப்பட்டு, லண்டனில் நடந்த நாணயப் பஞ்சாயத்தில் சாட்சியாக அனுப்பப்பட்டார்.

அங்கே போய் ஐயர் ஒரு திருவிளையாடல் செய்தார். சென்னையிலுள்ள ஒரு பாங்கியில் தமக்கு ஏராளமான பணம் இருப்பதாகச் சொல்லி, உண்டியல் கொடுத்து, லண்டனிலுள்ள ஒரு பாங்கியில் 600 ரூபாய் வாங்கிக்கொண்டார். இப்பொழுது நடைபெற்றதுபோலவே உண்டியல் மாறவில்லை. ஏனெனில், அவர் பேருக்குச் சென்னையிலுள்ள பாங்கியில் நூறு ரூபாய் சொச்சந்தான் இருந்தது. அது பற்றி வழக்கு ஏற்பட்டதில், சுந்தரம் ஐயர் பதினெட்டு மாதம் சிறைவாசம் பெற்றார். பின் ஒரு வருஷகாலம் வக்கீல் உத்தியோகம் இல்லாமலிருந்து, 'இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் நீதிபதி ஷாபியால் திரும்பவும் வக்கீல் சன்னது அளிக்கப்பட்டார். அதற்குப் பின்னும் இவர் மீது சில வழக்குகள் ஏற்பட்டு இன்னும் முடிவாகாமலிருக்கின்றது. இனி ஆயுள் பரியந்தம் இவருக்கு வக்கீல் வேலை கிடையாது.

லோகோபகாரி.

குறிப்பு:—பிராமணராய்ப் பிறந்தால், எவ்வளவு அயோக்கியனானாலும் கௌரவஸ்தானம் கிடைத்து விடுகிறது!

(ப—ர்)

## ஆலயங்களில் தாசிகள்.

ஆலயங்களின் தற்கால நிலை, இக்கால நாகரிகம் உணர்ந்தோர்களுக்கு மிக்க ஆபாசமாகவே தோன்றும். கோயில்களை நாடக மேடைகளாகவும், சோற்றுக் கடைகளாகவும், அடிக்கும் அறிவினர்களும் கோயிற்களைப் பரிபாலிக்கத்தகுந்தவர்களோ? ஆகவே ஆகார்.

ஆலயங்களில் தாசிகள் வருவதும், நிர்வாண உடைதரித்து ஆடுவதும், நமது ஆன்றோர்கள் எவ்வித கருத்தைக்கொண்டு உற்சவங்களை ஏற்படுத்தி அதனை நடத்தி வந்தார்களோ, அதற்கு முற்றிலும் மாறாக, இப்போது நடப்பதுமின்றி, அவைகள் கேட்டை விளைவிக்கத்தக்கதாயுமிருக்கின்றன.

ஒரு கோயில் மானேஜர்; அவர் திருநாமம் நாம் இங்கு குறிப்பிடவில்லை. உற்சவகாலமொன்றில், கற்றூண்கள் நான்கிலும், நான்கு பெரிய நிலைக்கண்ணாடிகளைக் கட்டி, நடுவில் சற்றேறக்குறைய ஓரே வயதுள்ள எட்டுக் கன்னியர்களை நிறுத்தி, எம்பெருமான் சந்நிதியிலேயே பின்னல் கோலாட்டம் போடும்படி ஏற்பாடு செய்திருந்தார். இங்ஙனம் நடிக்க ஒருப்பட்ட தாசிகளும், பெயருக்குமட்டும் ஆடை உடுத்தியிருந்தார்களேயன்றி, அந்த ஆடைகளால் அவர்களது சரீரத்திலுள்ள அவயவங்கள் மறைபடவே இல்லை. நாணம் என்பதனை விட்டு உற்று நோக்குவோருக்கு அவர்கள் சரீரத்திலுள்ள அவயவங்கள் முற்றிலும் அறை குறையாகவேனும் தெரியாமற்போகா.

இது ஓர் பக்கமிருக்க, சில கோவில்களில் தாசிகளைக்கொண்டே, சத்காலக்ஷேபஞ் செய்யப்படுகின்றன. இந்த சத்காலக்ஷேபத்தைத் துர்க் காலக்ஷேபமென்று கூறுவதற்கு என்ன தடை?

வாலிபர்களின் மீது வஞ்சகவலை வீசி, அவர்களின் பரிசுத்தமான மனதைப் பாழ்படுத்தும் தாசிகள், எம்பெருமான் சந்நிதியென்று ஒரு சிறிதுங்கருதாமல் பாடும் அசம்பாவிதமான பல காமச்சுவைகள் நிரம்பிய பாக்களைக்கேட்டால், மறு நிமிஷம் சாகப்போகும் வயோதிகனுக்குங் கூட காம இச்சையைப் பெருக்குமென்பதிலாக்ஷேபனையில்லை.

பண்டைகாலத்தில் ஆண் மக்களைப் போலவே பெண் மக்களும் ஆண்டவனிடத்தில் இறைபணி செய்து வந்தார்கள். அப்படிச்செய்து வந்த ஆண் மகன், தேவடியான், தாசன் என்றும், பெண் மகள், தேவடியாள், தாசி என்றும் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

இன்னவள் அகத்துறவு பூண்டு, ஆண்டவனையே வழிபடுவாள். ஓட்டையும், பொன்னையும் ஒருமிக்கவே நோக்குவாள். இடைக்காலத்தில், ஆலய அதிகாரிகள் பலர் தீயொழுக்கமுடையார்களைப் பணிசெய்ய ஆலயத்தில் அமர்த்தினார்கள். இதனால், உத்தம குணமுடையார் தொண்டு செய்ய நாணிவாளாயிருந்துவிட்டனர். இதுவே நாளடைவில், தீயொழுக்க முடைய போலித்தேவடியாளுக்கு ஆலயங்களில் உரிமை பெற ஹேதுவாய்விட்டன. நிற்க, போலித்தேவடியாளும் மனுஷப்பிறவி தாங்கியவளதான்; மனுஷப்பிறவியினால் எய்தவேண்டிய பேற்றை அடையக்கடமைப்பட்டவள் தான். இவள், அறிவின்மையால் பொருளுக்காக மானத்தை விற்றுக்காலத்தைக் கழிக்கின்றாள். இவைகளை விருத்தி செய்து தீயநடையை வளர்ப்பதோ, அறிவுடையோர் கடமை? அறிவுடையோர் இத்தீய வழக்கத்தை ஒழிக்க முன் வருவார்களாக.

தர்மகர்த்தர்களைப் பற்றியொருவார்த்தை. தர்மகர்த்தர்கள் தங்களுக்கேற்பட்ட நாமதேயம் தவறுதல் எனச் சொல்லும் படியான நிலைமையில் அதர்மகர்த்தர்களாகின்றனர். இவைகளெல்லாம் மாறுபட்டுச் சீர்படுங்காலமெக்காலமோ?

## ஜாதிக்கொடுமை தொலைய வேண்டும்.

ஸ்ரீமான். ஹரிதயாள் எம். ஏ. என்பவர் "மாடர்ன் ரெவியூ" பத்திரிக்கையில் "கல்வி விஷயமாக மூன்று அபிப்பிராயங்கள்" என்னும் தலைப்பின் கீழ் எழுதியிருக்கும் வியாசமொன்றில், ஜாதிக் கொடுமையைப்பற்றியும் வைதீகர்களின் அக்கிரமத்தைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். இதன் சுருக்கத்தை மொழிபெயர்த்து கீழே வெளியிட்டிருக்கிறோம்:—

நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. ஜாதிக் கொடுமையே குரு கோவிந்தசிங்கின் வேலையை அழித்தது. இந்த ஜாதிக் கொடுமையே மகாராஷ்டிரராஜ்யத்தை சின்னாபின்னமாக சிதறும்படி செய்தது. ஜாதி வித்தியாசமும், வைதீகமுமே மகாராஜா ரஞ்சிட்சிங்கின் மகத்தான சேனையை அழித்தன. நான் தேச சரித்திரத்தை ஆராய்ச்சி பண்ணினதில் தெரிந்து கொண்ட முடிவு இது தான். இப்போது வைதீகர்களென்னப்படும் கூட்டத்தாரே மகாத்மா காந்தியை எதிர்த்தும், கண்டனஞ்செய்து கொண்டும் வருகிறார்கள். இந்தியாவில் ஏதாவது மகத்தானதொரு இயக்கம் ஏற்படுமாயின், அதில் இந்த வைதிகர்களின் ஆதிக்கம் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால், அவர்கள் எல்லாரும் ஒன்றுகூடி இந்த இயக்கத்தை ஒழிக்கவே முயற்சி செய்கின்றனர். மகத்தான இயக்கங்களைத் தொலைக்க இந்த வைதிகர்கள் முன்வருவார்களே தவிர, தங்களுடைய பழைய ஜாதிக்கோட்பாட்டையும், வைதிக பெருமையையும், கைவிட மாட்டார்கள். ஜாதியும், வைதீகரின் ஆதிக்கமும், நிலைத்திருந்தாலும், ஒழிந்தாலும்சரியே, இவை இரண்டும்ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளவைகளாகும். இந்து மதமாகட்டும், அல்லது இந்தியாவிற்குத்தேவையான சுயராஜ்யமாகட்டும், ஜாதி வித்தியாசம் தொலைந்தாலொழிய முன் கூறியவைகளுக்கு க்ஷணயம் ஏற்படவேமாட்டாது. இது

(நவ இந்தியா.)

குடி அரசு.

சமூக விஷயமுமன்று; மதவிஷயமுமன்று. ஆனால், தேசிய-ராஜீயசம்பந்தமானதாகும். ஜாதிக்கொடுமையானது, நம்நாட்டில் ஏற்படும் எந்த சுதேச ராஜ்யத்தையும் அழித்து, பழையபடியே நம்மை அடிமைத்தனத்துக்குள்ளேயே ஆழ்த்திவிடும். இங்ஙனம் நேரிடுமானால் நாம், நமது பழையநிலைக்கே போய்ச்சேருவோம்.

ஆகையினால், இந்து-தேசிய கக்ஷிகள் யாவும் ஒன்று சேர்ந்து, இவைகளை நன்றாய் ஆலோசித்து, ஜாதிக்கொடுமையைத் தொலைப்பதற்கு ஏற்ற சாதனங்களாகிய, சமபந்திபோஜனம், கலப்புவிவாகம் முதலியவைகள் ஏற்படும்படி தகுந்த பிரசாரம் செய்ய வேண்டும். குருகோவிந்தசிங், இந்த ஜாதிக்கொடுமை தொலைந்தாலன்றி, ஓர் பலம் பொருந்திய சேனையைத் தயார் செய்யமுடியாதென்று தனது அநுபவத்தில் கண்டறிந்தார். ஜாதி பேதத்தை ஒழிக்காமல், இந்து சமூகத்தில் தேச ஆளுகையை நடத்த முடியாதென்று மகாராஷ்டிர சரித்திரம் கூறுகின்றது.

இப்படியே சரித்திர பூர்வமாக பல உதாரணங்களை எடுத்துக் காட்டிக் கொண்டே போகலாம். என்றாலும், அகில இந்து சமூகங்களும், ஜாதிக்கொடுமையை ஒழித்தே தீரவேண்டுமெனக் கூறுவதால், நான் அளவுகடந்து போகவுமில்லை; சமுதாய விஷயங்களில் தலையிடவுமில்லை. இவ்விஷயங்களைத் தகுந்தபடி கவனியாமல், எந்த இயக்கத்தை ஆரம்பித்தாலும் அது நிலைகுலைந்து போகுமென்பது உறுதியான விஷயமாகும். நீங்கள், மேடைகளிலேறி பிரசங்கங்கள் செய்யலாம்; அநேக தீர்மானங்களைச்செய்யலாம்; தேசிய மசோதாக்களைத்தயார் செய்யலாம்; இன்னும் என்ன செய்தபோதிலும் ஜாதிக்மையானது, இந்துக்களை ஒன்று சேர்ந்து சுயராஜ்யத்துக்கென உழைத்து ஜெயம்பெற வொட்டாதபடி தடை செய்து தான் வரும் இத்துடன் சுயராஜ்யத்தைக் காப்பாற்றிக்கொள்ள பலத்த சேனையொன்றையும், இந்த ஜாதிக்கொடுமையால் ஏற்படுத்தமுடியாமலிருக்கக் கூடுமென்பதையும் நீங்கள் அறிந்துகொள்ளலாம். எனவே, தேசியவிஷயத்தில் ஒவ்வொருவர் கவனத்தையும் பெறவேண்டியது இந்தப் பிரச்னைதானென்று கூறுவேன். நான் கூறும் இவைகளெல்லாம் எனது சொந்த அநுபவத்திலேயிருந்து கூறப்பட்டவைகளாகும். நமது வீரர்கள் சண்டையிடலாம்; தேசபக்தர்கள், தங்கள் அருமையான உயிரையும் அர்ப்பணம் செய்யலாம்; ஆனால் ஜாதிபேதமும், வைதீகமும் இவர்களாலேற்படும் வேலையை அழித்து விடுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. இந்த இரண்டு தேசாத்துருக்களையும், இனி அரை க்ஷணமேனும் உயிருடன் வைக்காமல் அழித்துப்போட வேண்டியதுதான் நமது கடமை. ஜாதிபேதமில்லாத ராஜீய கக்ஷியை இந்துக்களுக்குள் ஏற்படுத்தும் தலைவரே, இந்தியாவின் விடுதலைக்கு அடிகோலியவராவர். இதுவே புத்தருடையவும், குருகோவிந்த சிங்கினுடையவும் செய்தியாகும்.

---

## ஹிந்துஸ்தானி சேவாதளம்

### அவசரமும்—சுயநலமும்.

தமிழ்நாடு சேவாதளம், ஸ்ரீமான். த. நா. நடராஜ பிள்ளையினது பெருமுயற்சியாலும் திருவாளர், டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் பேராதரவாலும் திருச்சியில் சில மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்திற்கப்புறம் நாட்டப்பட்டது. அதற்கென தளபொதுக்காரியதரிசியாகிய திரு. த. நா நடராஜ பிள்ளையிடம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் சென்ற ஆண்டு ரூ. 250 கொடுப்பதாக வாக்கிந்து முதல் ஈடாக ரூ. 50 மாத்திரம் கொடுத்தார். அதைக்கொண்டு, சில தொண்டர்களின் வழிச்செலவிற்காக டாக்டர் உத்திரவுபடி கொடுத்தது போக பாக்கியை, அச்சுக்கூலி முதலிய செலவுகள், செய்து, பத்திரிகைப் பிரசாரங்கள் வழியாக மாத்திரம் 100 தொண்டர்களுக்கு மேல் சேர்த்திருப்பதாக அறிகிறோம்.

திரு. நடராஜன் அவர்கள் 3 ஆண்டு சிறையில் வதிந்தபோது, தேச ஊழியர்களுள் கட்டுப்பாடின்மையும், சுயநலமும், பயிற்சியின்மையும் கண்டு வருந்தி, திருப்பணிச் சேனை யொன்று தயார் செய்ய ஆவல் பூண்டு, ஆர்வத்தோடு உழைத்துவருகிறார். ஒருவாறு அவரது எண்ணம் தளத்தின் வழி உருவகப்பட்டு, தாயிடம் பாலின்மையால் தவிக்கும் குழந்தைபோல், தவித்துக்கொண்டிருக்கிறது.

அவர் தொண்டர் ஸ்தாபனம் ராஜீய மாறுதல்களால் கவரப்பட்டு அல்லல் படாவாறு காப்பாற்றினால் தான், மிகப்பலமாக ஊன்றுமெனக்கண்டு கொண்டார். தற்போது நமது மூளை வறட்சியுறுமாறு ஆட்டிவரும் சுயராஜ்ய கட்சியார் காங்கிரஸ் ஸ்தாபனங்களையும், செல்வாக்கு ஈனும் இடங்களையும் கைப்பற்றி அலைப்பர் எனத்தெரிந்தும், முதன் முதலிலே மாகாண மகாநாட்டுடன் தளத்தொண்டர் மகாநாடு கூட்டப்பட்டால் வீண் ஆடம்பரத்தில் முடியுமென்றும் எண்ணி, தமிழ்நாட்டின் செல்வக்குழந்தையாகிய மதுரையம்பதியில், சேவாதளத்தின் ஆதரவில், மகாநாடு ஜனவரியில் கூட்ட முயற்சி புரிவதாகத் தெரிகிறது. அதற்கு, பார்ப்பனரல்லாதாராகிய திரு. டாக்டர் நாயுடு அவர்களைத் தலைவராக தெரிந்தெடுக்கவும் அவருக்கு அவா இருக்கிறது. இச்சங்கதியை பல தலைவர்களோடு ஊடாடி யோசனை செய்ய காஞ்சியில் தோன்றும் பெரும் சந்தர்ப்பத்தை உபயோகிக்க எண்ணிய தருவாயில் மதுரையில் சில சந்தர்ப்பத்தால் தடுக்கப்பட்டார். நல்லது செய்ய நான்கு தடை என்பதே போன்று ஒருவாறு அவரது உள்ளத்தைப் பலர் அறிந்து உதவ கிட்டியபெரும் சந்தர்ப்பம் நடந்தது. பலர் களை போன்று கிளைத்தனர். தொண்டர் மகாநாடும் நடந்தது. சேவாதள புதிய கமிட்டி காஞ்சியில் முளைத்ததாக சுயராஜ்யா டிசம்பர் முதலிதழில் காணப்படுகிறது.


இக்கூட்டத்தை யார் கூட்டினார்? சேவாதளத்தின் காரியதரிசியா? இதைப்பற்றி முன்னெச்சரிக்கை யுண்டா? சேவாதளத்தின் வீரர் பெரும் பான்மையோராக அங்கு குழுமியிருந்தனரா? அவை யொன்றுமே இல்லை. தளத்தின் அங்கத்தவரில்லாவர் சிலர் கூடி, அங்கத்தவரில்லாத சிலரது கமிட்டி அங்கு நாட்டப்பட்டதை யாவரேனும் ஒப்ப முடியுமா? ஒரு தொண்டரேனும் அதை ஒப்பவே மாட்டார். வெகு சீக்கிரத்தில் இக்கமிட்டியின் உத்திரவுகள் தளத்தின் தொண்டர்களைப் பாதிக்காதெனும் சுற்றறிக்கையொன்று கொடுக்க திரு. நடராஜன் அவர்கள் முன் வருவாரென ஊக்கின்றனம். ஒரு தரம் நியமிக்கப்பட்டவர் ஓர் ஆண்டு வேலை செய்தால் தான் உருவகமான வேலை செய்ய முடியும். இங்ஙனமாக அவசரத்தாலும், சுயநலத்தாலும் சிலர் கூடி கலவரம் செய்தால், தீங்குவரும். உண்மைத் தொண்டர், தேச ஊழியத்தில் ஊன்ற ஆர்வமுள்ள பெரியார், ஸ்ரீமான். தேவநாயகம் அவர்கள் இதனால் வரும் பிரிவினையை நீக்க முன்வருவாரென நம்புகிறேன்.

பொதுக்காரியதரிசி ஸ்ரீமான். த. நா. நடராஜன் அவர்கள் வழிநின்று உதவி, ஜனவரியில் யாவரும் திகைக்கத்தக்கவாறு, தமிழ்நாடு சேவாதளத்தின் மகாநாடு ஒன்று கூட்ட வேண்டுகிறேன். நான் தளத்தின் தொண்டரில் ஒருவன். காஞ்சியில் கூடிய கூட்டம் சட்டவிரோதமானது; முன்னெச்சரிக்கையில்லாதது; பிரதிநிதித்துவ மில்லாதது. மற்றும் இக்கூட்டம் (22-10-25) ல் கூடியதாக சொல்லப்படுகிறது. ஆனால் டிசம்பர் முதற்தேதிவரை பத்திரிகைகளில் வரவில்லை. "சுயராஜ்யா" டிசம்பர் முதற்தேதி பத்திரிகையில் மாத்திரம் காணப்படுகிறது. இவ்வளவு நாள் தவக்கமேன்?

தஞ்சை ஜில்லா தளத்திற்கு தொண்டர் சேர்க்கும் விஷயத்தில் பின் தங்கியிருக்கிறது. அது நமது ஜில்லாவிற்கு வெட்கக்கேடான விஷயம். நான் திரு. வெங்கடகிருஷ்ண பிள்ளையோடு சில நாட்களில் அதற்கென சுற்றுப்பிரயாணம் செய்ய எண்ணியிருக்கிறேன். அதன் நிகழ்ச்சிக்குறிப்பு பின்னால் அறிவிக்கிறேன். தாம் தஞ்சை ஜில்லாவை இருகூறாக்காது ஒன்றாகவே பாவித்தால் நலம். ஆகவே எமது சுற்றுப் பிரயாணம் தஞ்சை, மன்னார்குடி திருவாரூர், நாகபட்டணம், நாகூர், நன்னிலம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, அதிவீராமன்பட்டணம், பட்டுக்கோட்டை, அரந்தாங்கி, திருக்காட்டுப்பள்ளி, கும்பகோணம், மாயவரம், முதலிய இடங்களாகலாம். தஞ்சை ஜில்லாவிற்கு உயிர்வர உதவுங்கள்! இன்னும் அழைக்கும் இடங்களுக்கும் செல்வோம்.

மேலராஜவீதி, தஞ்சாவூர்

சிவாநந்தம்,
தளத்தொண்டன்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-ஹூ மார்கழி-மீ கூ-உ

## காங்கிரஸ்

நமது நாட்டில் ராஜீயமுன்னேற்றங்களுக்கும், சமூதாயமுன்னேற்றங்களுக்கும், பொருளாதார முன்னேற்றங்களுக்கும், மகாத்மாவின் ஒத்துழையாமை சம்பந்தப்படாததற்கு முன் உள்ள காங்கிரஸ் காலங்களில், இவற்றிற்குத் தனித் தனியாக ஸ்தாபனங்களும், மகாநாடுகளும், நடந்து வந்தன. ஆனால், மகாத்மா அவர்கள் காங்கிரஸில் பிரவேசித்து, காங்கிரசின் மூலமாக ஒத்துழையாமையை, வலியுறுத்திய பின், ராஜீய, சமூதாய, பொருளாதார விஷயங்களோடு மாத்திரமல்லாமல், இன்னும் அநேக நன்மைக்கான காரியங்களும் சேர்ந்ததுதான் சுயராஜ்யமென்றும், அவ்வித சுயராஜ்யத்தை காங்கிரஸ் மூலமாகவே அடையக்கூடிய நிலைமையில், கொள்கைகளும், திட்டங்களும் அமைத்து அவற்றிற்கனுகூலமான பல காரியங்கள் தேசத்தில் நடை பெற்றுவந்தன. ஆனால், மகாத்மா அரசாங்கத்தாரால் சிறையிலடைபட்டபின்பு, மகாத்மாவின் கொள்கைக்கும், திட்டங்களுக்கும் விரோதமாயிருந்து, அதை ஒழிக்கப் பிரயத்தனப்பட்டுக்கொண்டு, சமயத்தை எதிர்பார்த்து, மகாத்மா கூடவே இருந்து வந்த சில பேர், மகாத்மா திட்டத்தை ஒழிக்க வெளிக்கிளம்பி பொதுசட்ட மறுப்புக்கு ஜனங்கள் தயாராய் இருக்கின்றார்களா? இல்லையாவென்பதைக் கண்டறிவதென்னும் சாக்கைக்கொண்டு "சிவில்டிசொபிடியன்ஸ்" கமிட்டி என்ற சட்டமறுப்பு கமிட்டியெனப் பெயர்வைத்துக்கொண்டு மகாத்மா செய்துவந்த காரியங்களையெல்லாம் அதற்கு நேர் விரோதமாய் இருந்து, அடியோடு கவிழ்ப்பதற்கான முயற்சிக்கு அதை உபயோகப்படுத்திக்கொண்டு, ஒத்துழையாமைக்கு விரோதமான தத்துவங்களில் புகுந்து, மகாத்மாவின் உழைப்பால், இரண்டு, மூன்று வருடங்களில் ஏற்பட்ட நன்மைகளை யெல்லாம் இடித்துத்தள்ள ஆரம்பித்தார்கள்.

கயா காங்கிரசில் ஒத்துழையாமை கட்டிடம் உருக்குலையத் தொடங்கி, டில்லியில் அஸ்திவாரமே தளர்ந்து, காக்கிநாடாவில் தரைமட்டமாக்கி விடப்பட்டது. ஜெயிலிலிருந்துவந்த மகாத்மா காந்தி அவர்கள், தான் சிறைக்குச்சென்ற பிறகு, தனது கட்டத்தை இடிக்கவிடாமல் காக்க வேண்டுமென்று நினைத்துப் பல வழிகளிலும் அவஸ்தைப்பட்டு, தங்களால் கூடுமானவரையில், அதன் சின்னமாவது தேசத்தில் இருக்கட்டுமென்று நினைத்துக் கஷ்டப்பட்டு வந்தவர்களை அலட்சியம் செய்து, இடித்தவர்கள் கூடவேதானும் சேர்ந்துகொண்டு, கொஞ்சநஞ்சம் மீதியுள்ள ஒத்துழையாமையின் அஸ்திவாரங்களையும், இடித்தெறியக் கல்கத்தா பேக்ட் மூலமாக முகூர்த்தம் வைத்து, பெல்காம் காங்கிரசில் அடியோடே அஸ்திவாரத்தையும் தொலைத்து, அதைஉழுது, ஒத்துழைப்பு விதையையும் விதைத்து, தானே கூட இருந்து தண்ணீரும் பாய்ச்சி, பாட்னாவில் பூவும், பிஞ்சும் விடக்கூடிய நிலைமையில் கொண்டுவந்துவிட்டுவிட்டார்.

மகாத்மா அவர்களை, இம்மாதிரி மூன்று வருடத்து வேலையை இப்படி இடித்துவிடலாமாவென்று கேட்டால், என்னுடைய இயக்கத்துக்கு விரோதமாக யிருந்தவர்களின் செய்கை ஒரு புறமிருந்தபோதிலும், என்னுடைய இயக்கத்துக்கு அனுகூலமாயிருந்து, எனக்கு உண்மையாக உதவிசெய்து கொண்டுவந்த என்னுடைய பிரதம சிஷ்யர்கள் என்போரே, ரிப்பேர் செய்யக்கூடாத நிலைமையில் கெடுத்துவிட்டதால், ரிப்பேர் செய்ய முடியாத இடிபட்ட ஸ்தாபனத்தை நான் அதை அடியோடு ஒழிப்பதைத் தவிர வேறு வேலை செய்வதற்கில்லை. ஏனெனில்,

1. நான் சிறைக்குப் போனவுடனே நான் செய்து கொண்டு வந்த காரியத்தை விட்டுவிட்டு, நான் யாரை முக்கியமாய் நம்பியிருந்தேனோ அவர்களே சட்ட மறுப்புக் கமிட்டிக்கு இணங்கி விட்டதொன்று.

2. கயாவில் சட்டமறுப்பு ஆரம்பிப்பதென ஓர் தீர்மானம் செய்துகொண்டு, பொது ஜனங்களை ஏமாற்றிப் பணம் வசூல் செய்து சொன்னபடி நடக்காமல், வேண்டுமென்றே சூழ்ச்சிசெய்து பொதுஜன நாணயத்தை இழந்ததொன்று.

3. பிறகு, கொஞ்சக்காலம் வரையிலும், பிரசாரத்தை நிறுத்தி வைத்திருப்பதென்று ஒப்புக்கொண்டு பொதுஜனங்களுடைய கவனத்தை வேறு வழியில் செல்ல இடங்கொடுத்ததொன்று.

4. டில்லியில், தனிக்காங்கிரசொன்றை ஏற்படுத்தி, அந்தக்கொள்கைக்கு விரோதமான காரியங்களை அநுமதித்ததொன்று.

5. பிறகு காக்கிநாடாவில், நான் சீக்கிரத்தில் விடுதலையாகி வந்துவிடுவேனென்ற விஷயம் தெரிந்திருந்ததும் எனது சகாக்கள் பொது ஜனங்களை ஏமாற்றி, எனது தத்துவத்துக்கு விரோதமான காரியங்களை ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தினதொன்று.

இந்த நிலைமையில், நான் ஜெயிலிலிருந்து வந்தபிறகு, வேறொன்றும் செய்வதற்கில்லாமல், ஒத்துழையாமையை ஒழித்துவிடுவதைத்தவிர வேறுமார்க்கமில்லையெனக்கண்டு கொண்டேன். எனது இயக்கத்தின் எதிரிகளின் மனப்பான்மை ஒரு விதமாயிருந்த போதிலும், எனது சகாக்களிலேயே மாகாணங்களுக்கு இரண்டொருவர் தவிர, மற்றவர்களுக்கெல்லாம் ஒத்துழைப்பு மனப்பான்மையே வளர்ந்து கொண்டு வருவது நன்றாய்த் தெரிகிறதென்றும், ஆதலால் ஒத்துழைப்புக்கே வழியைத்திறந்து விட்டுவிட வேண்டுமென்னும் முடிவுக்கு வந்துவிட்டேன்; சரியாகவோ, தப்பாகவோ, நான் கட்டின கட்டிடத்தை இடிக்க எனக்குப்பாத்தியமுண்டு. இதை ஒப்புக்கொள்ளாதவர்கள், வேண்டுமானால் தாங்களே வேறுகட்டிடம் கட்டிக்கொள்ளட்டுமென்றும் சொல்லிமுடித்துவிட்டதோடு,

தேசத்தின் நன்மையைக்கோரி, முன் சொன்ன ராஜீய—சமூக—பொருளாதார விஷயங்களுக்குக் காங்கிரசை எதிர்பார்ப்பது உபயோகமற்ற காரியமென்றும்கருதி, தனது முக்கிய திட்டங்களாகிய, இந்து—முஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்கு, தீண்டாமை முதலிய காரியங்களையும் காங்கிரஸ் திட்டத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டு, இந்நான்கில். ஏதாவதொரு காரியத்தை மாத்திரம், தான்எடுத்துக்கொள்ளுவதாகச் சொல்லி, நூல்நூற்கிற விஷயத்தைமாத்திரம் தன்சொந்தத்தில் வைத்துக்கொண்டு மற்றவைகளைவிட்டு மெல்லவிலகிக்கொண்டார்.

இந்த நிலைமையில் காங்கிரசானது பழையகால காங்கிரசைவிட சாதாரண நிலைமைக்கு வந்துவிட்டது. காங்கிரசின் கொள்கை இந்திய மகாஜனங்கள் சுயராஜ்யமடைய வேண்டுமென்றும், அதற்கு "நீதியும் அமைதியும்" பொருந்திய எல்லாமுறைகளையும் அனுசரிக்க வேண்டுமென்பதுதான்.

இதற்குத் திட்டமாக, தற்காலம் காங்கிரசிலிருப்பது, 'சட்டசபைகளைக் கைப்பற்றி, அவற்றை "சுயராஜ்யத்திற்கு" உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமென்பது தான்.

நமது நாட்டில் ராஜீய விஷயமாக மற்றும் பல ஸ்தாபனங்களுமிருக்கின்றன. அவைகளில் முக்கியமானது மிதவாதகட்சி, ஜஸ்டிஸ் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, பிராமணரல்லாதார் தேசீய கட்சி, சுயேச்சைக் கட்சி, பெஸண்டம்மையார் கட்சி முதலியன.

இவற்றில், ஒவ்வொருகட்சியும் மேற்கண்ட காங்கிரஸ் கொள்கைக்கும் மாறுபட்டவை அல்லவே அல்ல. உதாரணமாக, ஜஸ்டிஸ் கட்சியும், பிராமணரல்லாத தேசீய கட்சியும், தனது ராஜீய கொள்கைக் காங்கிரஸின் கொள்கையைப் போலவேஏற்படுத்திக் கொண்டிருப்பதோடு, ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டும், சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டும், எவ்வளவு சீக்கிரத்தில், பெறமுடியுமோ அவ்வளவு விரைவில் சுயராஜ்யம் பெறுவதென்ற கொள்கையை உடையதாயிருக்கிறது.

ராஜீய விஷயத்தில் மற்றகட்சிகளுக்கும், காங்கிரசுக்கும் வித்தியாசமிருந்ததெல்லாம் ஒத்துழையாமை திட்டமொன்றுதான். இது பெல்காமில் எடுபட்டாகி விட்டது. சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, சுயராஜ்யம் பெறுவதையும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டதற்கறிகுறியாக, சட்டசபைப் பிரவேசத்தையும் அநுமதித்து விட்டது. பிரிட்டிஷ் சம்பந்தமில்லாமலே சுய ஆக்ஷி இருக்கவேண்டும் என்பதே காங்கிரஸ் அபிப்ராயமல்லவென்பதற்கறிகுறியாக ஜனுப். மௌலானு ஹஸரத் மோகினி முதலானவர்கள் கொண்டுவந்த சுயேச்சைத் தீர்மானத்தையும் காங்கிரஸ் தோற்கடித்து விட்டது.

ஆதலால், தற்காலமுள்ள காங்கிரஸ் கொள்கைகளும், அதன் திட்டமும், ஜஸ்டிஸ் ராஜீய கொள்கைகளையே அநுசரித்து இருப்பதுடனல்லாமல், காங்கிரஸ் கொள்கையைவிட, ஜஸ்டிஸ் கொள்கையானது ஒரு அடி முற்போக்குடையதாயிருக்கின்றதென்று கூடசொல்லலாம். எப்படியெனில் "காலதாமதமில்லாமல் சீக்கிரம் சுயராஜ்யம்பெற வேண்டும்" என்கிற ஓர் அவசரகாலாவதியும் ஜஸ்டிஸ் திட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி, சர்க்காரோடு ஒத்துழைப்பதிலும் சுயராஜ்யக்கட்சியினுடைய அநுபவமானது, ஜஸ்டிஸ் கட்சி முதலியவைகளை ஒத்ததாகவே இருக்கிறது. சுயராஜ்யக்கட்சியார், சர்க்கார் கமிட்டிகளிலும் அங்கம் பெற்றிருக்கிறார்கள்; சர்க்கார் சம்பளம் பெறத்தக்க உத்தியோக பதவிகளிலும் அமர்ந்திருக்கிறார்கள்; சர்க்காரால் அளிக்கப்பட்டுள்ள பட்டங்கள் பெற்றவர்களும் சுயராஜ்யக்கட்சியிலிருக்கின்றார்கள். முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு, தாலூகா போர்டு முதலியவைகளில் சர்க்கார் நியமனஸ்தானத்தை ஏற்றுக்கொண்டவர்களும், சுயராஜ்யக்கட்சியிலிருக்கின்றார்கள்; கதரில் நம்பிக்கையில்லாதவர்களும்; சுயராஜ்யக்கட்சியிலிருக்கின்றார்கள்; மதுபானம் உற்பத்தி செய்கிறவர்களும், அதனை விற்கிறவர்களும், அதை விளம்பரப் படுத்துகிறவர்களும், அயல் நாட்டுத்துணி வியாபாரிகளும், பிறவியில் உயர்வு, தாழ்வு உண்டு என்று சொல்லுகிறவர்களும் சுயராஜ்யக்கட்சியிலிருக்கின்றார்கள்.

இத்தகைய சுயராஜ்யக் கட்சியாரை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு பிரதானஸ்தானமும் அளிக்கப்பட்டாய் விட்டது.

இந்த நிலைமையில், இந்தியாவிலுள்ள ராஜீய ஸ்தாபனங்கள் சகலமும் காங்கிரஸ் உட்பட ஒரே கொள்கையைத்தான் கொண்டதாயிருக்கிறது. ஆகையால் தேச முன்னேற்றத்துக்குக் காங்கிரஸ் மகாசபையொன்றுதான் உள்ளது என்று சொல்வது இனி பொருளற்றவார்த்தையாகும். எனவே, பொதுமக்கள் காங்கிரசில் சேரா விட்டால் நாம் தேச பக்தர்களாக மாட்டோமோவென்று பயப்படவேண்டியதும், ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தால் காங்கிரசிலிருப்பவர்களை [illegible]வர்களாகி விடுவோமோவென்றும் பயப்படுவதும் அறியாமையேயாகும்.

இந்தியர் ஒவ்வொருவரும் சுயமரியாதை அடைவதும், விடுதலை பெறுவதும், தனது முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும். இந்நோக்கம் கொண்ட ஸ்தாபனம் எதுவோ, அதெல்லாம் தேசிய காங்கிரஸ்தான் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## ஸ்ரீமான், திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

காஞ்சீபுரம் மகாநாட்டு விஷயத்தைப் பற்றி நமது பத்திரிக்கையில் "காஞ்சிமகாநாட்டுத்தலைவர்" என்னும் தலைப்பின் கீழ் எழுதிவந்தோம். இனி, திரு. வி. கலியாசுந்தர முதலியார் என்னும் தலைப்பின் கீழ் எழுத அவசிய மேற்பட்டுப் போனதைப் பற்றி நாம் இதுவரையில் அடைந்திராத வருத்தத்தையும், கவலையையும் உண்மையிலேயே அடைகிறோம். ஆனாலும், கடமையைவிட்டு நழுவி அசக்தியத்தைக் காண்டவமாடச்செய்ய மனம் ஒருப்படேனென்கிறது.

சென்ற வாரம் ஸ்ரீமான். முதலியாரவர்கள் தன்னுடைய தலைமைப்பதவியை மனச்சாட்சிப்படி நடத்தினாரா? என்கிற விஷயத்தைப் பொது ஜனங்கள் அறிவதற்காக, பல விஷயங்களுக்கு, ஸ்ரீமான். முதலியாரைப் பதிலெழுதும்படி எழுதியிருந்தோம். அவற்றிற்கு நேர்முகமாகப் பதில்சொல்லாமல், இரண்டு, மூன்று விஷயங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிச்சில விஷயங்களை எழுதியிருக்கிறார். அவைகளில் பெரும்பான்மை முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோலவே யிருக்கிறது. அதற்குப்பதில் ருஜுவோடு எழுத வேண்டியது, நமது கடமையாய்ப் போய்விட்டதாதலால் பின்னால் அவற்றைப் பற்றி எழுதுவதோடு, ஸ்ரீமான். முதலியார் விடை அளிக்காமல் விட்டு விட்ட விஷயங்களை, மறுபடியும் அவர் ஞாபகத்துக்குக்கொண்டுவர எண்ணியிருக்கிறோம். இதன்மத்தியில், இது விஷயத்தைப்பற்றி பலகடிதங்கள் நமது கருத்தைத் தழுவி வந்துகொண்டிருக்கின்றன. அவற்றிற்கு நமது பத்திரிக்கையில் இடமில்லாததற்கு வருந்துகிறோம்.

## கல்பாத்தி

'பிராமணர்களைவிட வெள்ளைக்காரரே மேல்'

கல்பாத்தியில் தீண்டாத வகுப்பாரென்று சொல்லப்படும், இந்து சகோதரர்களை அந்தத்தெருவில் நடக்கக்கூடாதென்று, 144. தடை உத்திரவு பிறப்பித்தது பற்றி, இச்செய்கைக்கு ஸ்தல அதிகாரிகள் பொறுப்பாளிகளல்லவென்றும், சென்னை கவர்ன்மெண்டாரே இச்செய்கையின் பெரும்பாகத்திற்குப் பொறுப்பாளிகளென்றும், அதிலும் ஸ்ரீமான். ஸர்.சி.பி.இராமசாமி ஐயர் என்கிற ஓர் பிராமணகனவான் சட்ட இலாகாத் தலைவராயில்லாமலிருந்தால், இம்மாதிரி காரியங்கள் நிகழ்ந்திருக்காதென்றும், பொது ஜனங்கள் அபிப்ராயப்பட்டிருந்த விஷயமானது, இப்போது அடியோடு பொய்யென்று சொல்வதற்கில்லாமல், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, சென்னை சட்டசபையில் கேட்ட கேள்விகளினாலும், அதற்கு ஸர் சி. பி. இராமசாமி அய்யர், அளித்த விடைகளினாலும், இருக்கிறது. அதாவது:— பாலக்காடு மாஜிஸ்திரேட் 144. உத்திரவு போடும்படி கவர்ன்மெண்டார், தூண்டவில்லையானால், கவர்ன்மெண்டுக்கும். பாலக்காடு மாஜிஸ்திரேட்டுக்கும் நடந்த கடிதப்போக்குவரத்துக்களை காண்பிக்கமுடியுமா என்ற கேள்விக்கு, ஸர். சி. பி. இராமசாமி ஐயர், அக்கடிதப் போக்குவரத்துகள் இரகசியமானபடியால் காட்ட முடியாதென்று பதிலுறுத்தியிருக்கிறார்.

பாலக்காடு மாஜிஸ்திரேட் கல்பாத்தியில் இவ்விதமான உத்திரவு போடவேண்டிய அவசியமில்லையென்று ஒரு சமயத்தில் வெளியிட்டிருக்கிறாரா? இல்லையா? என்று ஸ்ரீமான். சி. ஆர். ரெட்டி கேட்ட கேள்விக்கு, சட்டமெம்பர். ஸர். இராமசாமி ஐயர் தான்பதில் சொல்லத்தயாராயில்லையென்று சொல்லிவிட்டார்.

இந்த கல்பாத்தி விஷயத்தில் என்ன செய்வதென்பதைப் பற்றி கவர்ன்மெண்டை பாலக்காடு மாஜிஸ்திரேட் அபிப்பிராயம் கேட்டாரா? இல்லையா? என்று ஸ்ரீமான். சசிபூஷண ராவ் கேட்டகேள்விக்கு, சட்டமெம்பர் ஆம் என்று சொன்னதோடு, பொது நன்மையை உத்தேசித்து. வெகு காலமாக நடந்த வர்த்தமானங்களை வெளியிடதாம் தயாராயில்லையென்று சொல்லிவிட்டார்.

இந்தக் கேள்விகளும், பதில்களும் பொது ஜனங்களைச் சர்க்காரிடத்திலும், பிராமண சட்ட மெம்பரிடத்திலும் சந்தேகங்கொள்ளாமல் எப்படி இருக்கச்செய்யும்? இந்த இந்திய பிராமணர் இருந்த ஒருஸ்தானத்தில் ஸ்ரீமான்கள். எம். ஸி. ராஜாவோ, ஆர். வீரையனோ இல்லாமலிருந்தாலுங்கூட ஒரு வெள்ளைக்காரமெம்பராவது இருந்திருப்பாரானால், இம்மாதிரி சம்பவங்கள் நடந்திருக்குமா வென்பதையோசிக்கும்போது பலகாரணங்களுக்கு, பிராமணர்களைவிட வெள்ளைக்காரர் கொஞ்சம் மேலென்றுதான் தோன்றுகிறது.

# நம்பிகை துரோகம்.

தென்னாட்டில் பிராமணர்களின் கொடுமைகளை வெளிப்படுத்தி அவர்களால் அழுந்திக்கிடக்கும் பிராமணரல்லாதார் சமூக முன்னேற்றத்துக்குப் பாடுபடும் இயக்கங்களையும், தொண்டர்களையும் ஒழிப்பதற்கு தென்னாட்டு பிராமணர்கள், பிராமணரல்லாதாரிலேயே சில விபூஷணாழ்வார்களை தங்களுக்கு ஆயுதமாக உபயோகப்படுத்திக்கொண்டு வந்தது நமக்குப் புதிய சங்கதியல்ல.

சரித்திரகாலம் எப்படி யிருந்தாலும், நம் கண்ணெதிராகவே சென்ற 10 வருடங்களாக நடந்த காரியங்களைக் கவனிப்போம். பிராமணரல்லாதார் நன்மைக்கென்று சந்தேகமற்ற தேசபக்தரான டாக்டர். நாயர் போன்றவர்களால் ஏற்படுத்தப்பட்ட, ஜஸ்டிஸ் கக்ஷியை ஒழிக்க, சில பிராமணரல்லாதாரைக் கொண்டே சென்னை மாகாணச் சங்கமென ஒன்றை உண்டாக்கச் செய்து, அதற்கு வேண்டிய செலவுகளுக்கு தாங்களே பணம் கொடுத்தும், இந்தியாவில் மாத்திரமல்லாமல், இங்கிலாந்திலும் போய் ஸ்ரீமான். டி. எம். நாயர் அவர்களுக்கு விரோதமாக பிராமணரல்லாதாரைக் கொண்டு எதிர்ப் பிரசாரம் செய்வித்தும், உண்மைக்கு விரோதமான சாக்ஷியம் சொல்லும்படி செய்ததுமல்லாமல், ஜஸ்டிஸ்க்கட்சியார் பிராமணரல்லாதவர்களுக்குப் பிரதிநிதிகளல்லவென்றும், நாங்கள்தான் சரியான பிரதிநிதிகளென்றும், சொல்லச்செய்து, பணத்திற்கும், விளம்பரத்திற்கும் ஆசைப்பட்ட பல பிராமணரல்லாதாரைத் தங்களிஷ்டம்போல் ஆட்டுவித்துவரும் சூழ்ச்சிகளையும் நாம் நேரிலேயே பார்க்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாக ஏற்படுத்தப்பட்ட சென்னை மாகாணச் சங்கத்திற்கு முக்கிய கொள்கைகள் மூன்று. அவை, ராஜீய விஷயங்களில் காங்கிரசைப் பின்பற்றுவது; தென்னிந்தியாவில் பிராமணரல்லாதார் வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் அடைவது; பிராமணரல்லாதாருடைய முற்போக்குக்கான காரியங்களைச்செய்வது ஆகியவைகளே. இக்கொள்கைகளைத் தென்னாட்டு தேசிய பிராமணர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டு, தாங்களும் பக்கத்திலிருந்து நிறைவேற்றிவைததோடல்லாமல், தாங்களும் அதற்கு அனுகூலமாயிருப்பதாகச்சொல்லி நமது கூடவேயிருந்து, ஜஸ்டிஸ் கட்சியின் செல்வாக்குக் குறைந்ததாக மதித்துக்கொண்டு, இப்பொழுது "மீக்கு பெப்பப்பே, நீவு தாத்தாக்கு பெப்பப்பே" என்பதுபோல் அடியோடு பழைய சங்கதிகளை மறந்து, வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் தேசத்திற்குக் கெடுதியென்று, ஞானோபதேசம் செய்யவந்து விட்டதோடு, இதற்கும் சில பிராமணரல்லாத விபூஷணாழ்வார்களை சுவாதீனமாக்கிக்கொண்டு, அவர்களைக்கொண்டே வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் தேசத்திற்குக்கேடு என்று சொல்வதோடல்லாமல், சத்தியத்தையும், மனச்சாட்சியையும் கூட மறக்கும்படி செய்து அவைகளைப்பலி கொடுத்து விட்டார்கள். ஜஸ்டிஸ் கக்ஷியை ஒழிக்கவேண்டிய அவசியத்திற்காக சென்னை மாகாணச்சங்கத்தின் மூலம், பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கொடுப்பது ஸ்ரீமான். சி. இராஜகோபாலாச்சாரியார் உட்பட, பல தேசிய பிராமணர்களுக்கு அவசியமாயும், நாட்டுக்கு நன்மை பல பயப்பதாயும் பட்டது. ஆனால், சென்னை மாகாணச்சங்கத்தின் மூலமாய்த் தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்திக் கொண்டதாய் நினைத்துக்கொண்டவுடன், நமது பிராமண சகோதரர்களுக்கு, இப்போது வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கொடுப்பது நாட்டுக்குக்கேடு விளைவதாய்ப் போய்விட்டது.

ஈரோட்டில், சென்னை மாகாணச்சங்க மகாநாடு நடைபெற்ற காலத்தில், வகுப்புவாரிப்பிரதிநிதித்வதீர்மானம் உட்பட சகல தீர்மானங்களும், விஷயாலோசனைக்கமிட்டியில் ஸ்ரீமான்கள். சேலம். சி. விஜயராகவாச்சாரியாரவர்களாலும், திரு. வி. கலியாணசுந்தர முதலியாராலும், டாக்டர், வரதராஜுலு நாயுடுவாலும், வி. ஓ. சிதம்பரம்பிள்ளையாலுமே முக்கியமாய் தயார் செய்யப்பட்டது. அடுத்தநாள் மகாநாட்டிலும், ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடுவாலேயே பிரேரேபிக்கப்பட்டு நிறைவேறியது.

ஸ்ரீமான்கள். முதலியாரும் நாயுடுவும்தான் சென்னை மாகாணச் சங்கத்தின் பிரமுகர்கள். இவர்களை நம்பித்தான், பிராமணரல்லாதாரில் பலர் ஜஸ்டிஸ் கட்சியை விடுத்து சென்னை மாகாணச் சங்கக்கட்சியில் சேர்ந்தது. பிராமணரல்லாத பாமர ஜனங்களும், தங்களது முன்னேற்றத்திற்கு இவர்களைத்தான் எதிர்பார்த்திருந்தார்கள். இப்படியிருக்க, இன்றையத்தினம் இவர்களின் நிலை என்னமாயிருக்கின்றதென்று யோசித்துப் பார்த்தால் எழுதவே கைநடுங்குகிறது. தலைக்குமேல் வெள்ளம் போகும் போது, சாண்போனாலென்ன? முழம் போனாலென்ன? என்கிற தைரியம் நமது முதலியாருக்கு வந்து விட்டது. ஸ்ரீமான். நாயுடு அவர்களாவது, வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் கேட்காவிட்டாலும், அதை எதிர்க்காமல் சும்மாவாவது இருக்கிறார்.

வகுப்புவாரிப்பிரதிநிதித்வத்துக்குப் பதிலாக வேறு ஏதாவது மார்க்கமுண்டாவென்று யோசிக்கிறார். வேறு மார்க்கம் கிடைக்காவிட்டால், முடிவாய் அவர் என்ன செய்வாரென்கிற விஷயம் நமக்குத் தெரியும். நமது முதலியாரோ, துணிந்து "வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் சென்னை மாகாணச் சங்கத்தார் தற்கால நிலைக்கென கேட்டார்கள்; அந்தப்படியே கிடைத்து, அதன் பயனை நாடு அடைந்து வருகிறது; தற்கால நிலைக்கென கேட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை என்றும் கேட்டுக் கொண்டிருத்தல் நியாமாகுமா?" என்று சிலம்பொலியில் தர்ம நியாயம் பேசுகிறார்.

ஸ்ரீமான். முதலியார், சென்னை மாகாணச் சங்கத்தின் மூலமாய் கேட்கப்பட்ட வகுப்புவாரிப்பிரதிநிதித்வம்நமக்குக் கிடைத்துமாய் விட்டதுபோலும், நாம் அதை அனுபவித்தாய் விட்டதுபோலும், வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் எதை உத்தேசித்துக்கேட்டோமோ, அவைகள் சரிப்பட்டாகி விட்டதுபோலும், இன்னமும் அது இருந்தால், நாட்டுக்குக் கெடுதி விளைவிக்குமென்பதுபோலும், ஆதலால் அதைக் கேட்கக் கூடாதென்பதுபோலும் உபதேசிக்கிறார். இவ்வுரைகள், வகுப்புவாரிப்பிரதிநிதித்வத்தையும், விடுதலையுரிமையையும் அடைய உத்தேசங்கொண்டு ஆரம்பித்த "தேசபக்தன்" ஆசிரியரும், தொழிலாளர் நன்மைக்கென்று ஆரம்பித்த "நவசக்தி" ஆசிரியருமான ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியாருக்குத்தகுமா? இது தர்மந்தானா? என்று கேட்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டியதற்கு மாத்திரம் வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் வேண்டியிருந்தது, இப்போது வேண்டாமற் போய்விட்டது! இவ்வித நம்பிக்கைத் துரோகத்தில், நமது திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களுக்கு ஏன் பங்கு இருக்கவேண்டும்? பிராமணர்கள் சம்மதித்தால் தனக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் வேண்டும்; அவர்கள் சம்மதிக்காவிட்டால் தனக்கு வேண்டாம், என்கிற கொள்கை, நமது முதலியாருடைய கொள்கையாகலாமா?

வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கேட்பதில் நமது முதலியாருக்கு, இப்போது உள்ள ஆக்ஷேபணைகள், அதற்கெனவே ஓர் சங்கத்தை ஸ்தாபித்த காலத்தில் எங்கே மறைந்து கிடந்தது? இவற்றையெல்லாம் கொஞ்சமும் நினைத்துப்பாராமல், வகுப்புவாரிப்பிரதிநிதித்வம், உரிமைப் போருக்கு விரோதமென்று சொல்லுகிறார். அவனவன் உரிமை, அவனவனுக்கு வழங்கப்படாமல் வஞ்சித்துக் கையில் பலத்தவன் காரியமாக்குவதுதான் உரிமைப்போரின் தத்துவம் போலும்.

ஸ்ரீமான். முதலியாரவர்களே இந்துக்களுக்குள் இதுபோழ்து மூன்று பிரிவுகள் இருக்கிறதாகவும், அவை பிராமணர், பிராமணரல்லாதார், ஆதி திராவிடர் ஆகிய இவர்களென்று ஒப்புக்கொள்ளுகிறார். இவ்வகுப்புகள், அதனதன் உரிமையை இராஜரீகத்திலாவது, சமூக விஷயத்திலாவது, பிரஜாதர்மத்திலாவது, சமமாய் அடைந்திருக்கிறதா? என்று முதலியாரை வணக்கத்துடன் கேட்கிறோம். இவைகளுக் கில்லாதஉரிமைப்போர், வேறு எதற்கு? மற்றும் யாருக்கு?

துறவறத்திற்கு காவிவேஷ்டி உடுத்திக்கொள்வது, ஜனங்களை ஏமாற்ற எப்படி ஒரு சாதனமாயிருக்கிறதோ, அதுபோல் ராஜ்யத்திலும், உரிமை—சுயராஜ்யம் என்கிற வார்த்தைகள் ஏழை மக்களை வஞ்சிக்கவும், மற்றும் பாமரர்களை ஏமாற்றவும், மற்றும் பல காரியங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடிய சாதனமாகப் போய்விட்டன.

இப்பொருள் கொண்ட சாதனங்களை, ஸ்ரீமான். முதலியார் ஏன் உபயோகப்படுத்த வேண்டும்? இவற்றை நினைக்கும்போது நமது நாட்டின் பிற்கால வாழ்விலும், பிராமணரல்லாத சமத்வத்திலும், நம்பிக்கையைவிட அவநம்பிக்கையே வலுத்து வருகிறது.

ஆனால், நமது கடமையை நினைக்கும்போது சும்மாயிருக்க முடியவில்லை.

## சாதிகள்

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் நான்கு, அவை தாம் அறிவு, வலிமை, செல்வம், உழவுஎன்பவை. இந்நான்கு தொழில்களும் முறைப்படி நடவாவிடின் மக்கள் வாழ்வு வீழ்ந்துபடும். பிறகு வாழ்க்கையென்பது பொருளற்ற ஒரு வெறும் சொல்லாகிவிடும்.

இவற்றுள்— அறிவுச்செல்வத்திற்குக் காவலாளிகள் அந்தணா உடலுரத்தை வளர்த்து, அதனல் நாட்டு வளத்தைக்காப்பவர் போர் மறவர் (க்ஷத்திரியர்) பொருட்செல்வத்திற்குக்காவலர், செட்டி மக்கள், உழுது பயிரிட்டு நாட்டுக்கு உணவளிப்போர் உழவர் இந்நான்கு உயிர்நிலைகள். ஆதலாலன்றே, நமது பாரதியாரும் 'நாலு வகுப்பு மிங்கொன்றே-இந்த நான் கினிலொன்று குறைந்தால், வேலைதவறிச்சிதைந்தே, செத்து-வீழ்ந்திடும் மானிடச்சாதி' என்று முரசறைகின்றார். இவ்வுண்மைகொண்டே மக்களுள் அறிஞர் பண்டைக்காலத்து நான்குபிரிவினைகள் வகுத்தனர். இந்நான்கு பிரிவினைகளும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு- தொழில் நன்கு நடைபெறவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன், ஏற்படுத்தப்பட்டன.

ஆதியில் இவ்வாறு ஏற்பட்ட நான்கு பிரிவினைகள், பிற்பட்டோரால் பலமாறுதலடைந்தன. தொழிற் பிரிவினைகள் போய் உயர்வுதாழ்வுப்பிறப்பே சிறப்புக்குக்காரணமாகக் கருதப்பட்டது. அறிவுக்கரண்களான அந்தணர்கள் தமது பிறழ்ந்த அறிவாலும் தமது தன்னயப்பான்மையாலும், தம்மை உயர்த்தியும் மற்றோரைத்தாழ்த்தியும் சாத்திரங்கள் வகுத்தனர். அவ்வாறு வகுக்கப்பட்ட நூல்களுள் மனுமுறையும் ஒன்று போலும்; அறிவாளி, (அவன் யாராயிருப்பினும்) அந்தணன். போர்வல்லோன் போர்மறவன் வியாபாரிகள் செட்டிமக்கள் குடியானவன் உழவன் என்பனபோய் உயர்ந்த ஜாதியில் பிறந்தவன் அந்தணன், தாழ்ந்தவகுப்பினன் உழவன் என்று உயர்வுத்தாழ்வாக மாறிவிட்டது. மதமென்பது அன்புநெறியை மனத்தினின் றகற்றி வன்புநெறியை ஆங்கு இருத்தியது, மனிதத்தன்மையை அழித்தது, பல பல பூசல்களை விளைத்தது, இன்றும் விளைக்கின்றது. தற்கால சாதி முறைமையினலங்கோலம் அறிவாளிகள் ஒவ்வொருவருள்ளத்திலும் ஆறாத்துயரமுண்டாக்கு மென்பதில் ஐயமே யில்லை.

இந்நான்கு பிரிவோடு—ஐயோ! சொல்ல மனம் நடுங்குகின்றது, எழுதக்கைகூசகின்றது, கண்ணில் செந்நீர் வடிகின்றது, பஞ்சமரென்ற ஐந்தாவது வகுப்பார் பிரித்தொதுக்கப்பட்டனர். ஆ! அவர்கள் வாழ்க்கையின் தாழ்ந்த நிலையென்னே! அவர்களது பரிதாப காமான குழிந்த கண்ணும் வாடிவதங்கி உயிரற்ற எலும்பு உடலும், முதுகை ஒட்டிய வயிறும் கண்ட ஒவ்வொருவனும் "அவர்கள் உயர் நிலைப்படுத்தாதவரை உண்ணேன், உறங்கேன், ஒரு தொழிலும் செய்யேன் என்றன்றோ ஆணைகூறுவன்." அவர்களுக்கு உண்ண உணவில்லை, உடுக்கத்துணியில்லை, குளிப்பதற்கும் குடிப்பதற்கும் தண்ணீரில்லை, நடக்கப் பாதையில்லை, படிக்கப் பள்ளியில்லை, வணங்கத் தெய்வமில்லை. இன்னும் இல்லை இல்லை என்பதே அவர்களது வாழ்வுபோலும்; இவ்வாறு மக்களுள் ஒரு வகுப்பாரை ஒறுக்குவதை அநியாய மென்பதா, அதர்மமென்பதா, யாதெனக்கூறுவது. அதற்குமேல் ஒரு சொல்லும் காணேமோ? இம்மாசு நீக்கப்படாவரை—இந்திய சமூகம் பின்னடைவது திண்ணம்.

சமூக வாழ்வு, அன்பு நெறியில், அறநெறியில், இன்பநெறியில் நடத்தப்படல் வேண்டும். சமூகமென்பது பலமக்களது கூட்டம் இக்கூட்டத்திற்குச் சில பொது நெறிகள் உண்டு. அப்பொது நெறிகள் யாவர்க்கும், பொதுவாய், எல்லா மக்கட்கும் உதவவேண்டும். இல்லையேல் சமூகத்தின் உறம் உடைந்துவிடும். அத்தகைய நிலையே நமது நாட்டிலும் தற்காலம் நிகழ்வது அந்தணர் உயர்ந்தார்; மற்றவர் தாழ்ந்தார்; பஞ்சமரிழிந்தார் என்பவை ஒழிந்து வேதியாராயினுமொன்றே அன்றி வேறு குலத்தினராயினுமொன்றே, ஜாதி மதங்களைப் பாரோம் என்று ஒவ்வொருவனும் உறுதிமொழிய வேண்டும். அம்மாதிரி நடக்க முயலல் வேண்டும். தீண்டாமையை அறவே ஒழிக்க வேண்டும், உயர்வுத்தாழ்வு எண்ணங்களை ஒருங்கே ஒடுக்கவேண்டும். ஒற்றுமைக்கும் சமநிலைக்கும் எதிரிடையான சாஸ்த்திரங்களை நெருப்பிலிட்டுப் பொசுக்கவேண்டும் என்று சொல்லக்கூட என் மனம் விரைகின்றது. இத்தகைய மாறுதல்கள் நமக்குள் ஏற்படாவிடின் நாம் என்றும் தாழ்ந்தோராகவே யிருப்போம் என்று சொல்லுகிறார் இராமலிங்கப்பரதேசியார்.

> "சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
> சாஸ்திரசந்தடிகளிலே கோத்திரசண்டையிலே
> ஆதியிலே அபிமானித்தலைகின்ற உலகீர்
> அலைந்தலைந்து வீணே நீர் அழிதலழகலவே"

இதுவே எமது நெறியும்.

S. D. சுப்பிரமணியம்.

## தஞ்சை ஜில்லா ஹிந்து சமாஜம்.

12–12–25– சனி, அன்று மாலை 4–30 மணிக்கு கமிட்டி காரியாலயத்தில் நிர்வாக கமிட்டி கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான். R. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமை வகித்தார். அடியிற்கண்ட நிர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தேவஸ்தான தர்மபரிபாலன ஆக்டை பற்றி பலதிறப்பட்ட அபிப்பிராயம் கூறப் பட்டதால் அவை ஒத்திவைக்கப்பட்டன 20 நிர்வாக கமிட்டி அங்கத்தினர்களில் 6 பெயர்கள் வந்திருந்தார்கள். புதுவருட தேர்தலை பற்றி ஆலோசிக்கப்பட்டதில் அடுத்த வருடம் சமாஜத்தின் முற்போக்கை மிகத்தீவிரமாக அநுஷ்டிக்கப்போவதால், வருடாந்தர கூட்டத்தில் உத்தியோகஸ்தர்களைத்தெரிந்தெடுப்பதென்றும், அதுவரை ஸ்ரீமான். ஜி. இராஜகோபால் பிள்ளையவர்கள் தலைவராகவும், R. சுப்பிரமணிய அய்யர் உபதலைவராகவும், ஸ்ரீமான். வெங்கட்டராம அய்யர் அவர்கள் காரியதரிசியாகவும், வீ. வைத்திலிங்கம் பிள்ளை. உதவிகாரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். மஹாநாட்டை நடத்த ஜில்லாவின் சகல கக்ஷித் தலைவர்களையும், மதப்பற்றுடைய பெரியார்களையும் கலந்துகொண்டு மஹாநாட்டுத்தலைவர்– இடம், காலம், முதலியவைகளை குறிப்பிடுவதென முடிவு செய்யப்பட்டது. மிக புனிதமான இந்த ஜில்லாவின், சகலசகோதரபத்திரிக்கைகளும் ஒரே மனதுடன் ஒத்துழைத்து மதசம்பந்தமான புனருத்தாரணத்தில் வெற்றியுருமாறு உதவி புரியுமென நம்பப்படுகிறது. தீர்மானங்கள்:—

1- மகாத்மா காந்தியடிகளுக்கு நீண்ட ஆயுளும், திடசரிரமும், மென்மேலும் பெருக அருள் சுரந்து வரவேண்டுமென அந்தராத்மாவான ஜெகதீசனைப் பிரார்த்திக்கிறது.

2. காரியதரிசியால் படிக்கப்பட்ட-மகாத்மா காந்தியடிகளின் கீதா ரகசியத்தையும், மதசம்பந்தமான குறிப்புகளையும் அச்சிட்டு ஜில்லாமுழுதும் பரவும்படி செய்ய காரிய தரிசிக்கு அதிகாரம் கொடுப்பதுடன் அதற்காக ரூபாய் 20 செலவுசெய்யவும் அனுமதியளிக்கிறது.

3. ஹிந்துக்களின் க்ஷீணதசையை காட்டுவதுபோல் மடங்களின் அதிபர்களும், தேவாலய டிரஸ்டிகளும், அடிக்கடி கோர்ட்டுக்கு செல்வதற்கு வருந்துவதுடன், இனியும் அத்தகைய சம்பவங்களுக்கு இடமளிக்காது இருக்குமாறு அப்பெரியார்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. தற்கால நீதிஸ்தலங்களில் சிலகாலமாய் நீதியுண்டா? என்னும் சந்தேகிக்கும் சிலருக்கு நம்பிக்கையளிப்பதுபோல் நம்மால் நிரபராதியானவர், பெரியவர், எனப் புகழப்பட்டவரும், ஆயிரக்கணக்கான பொது மக்களின் இருதயம் போன்றவருமான, சைவபரம்பரை தருமபுரம் ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ ரெத்தினசபாபதிதேசிகர் அவர்கள்மீது தொடரப்பட்ட மிக அபவாதமான குற்றத்திற்கு ஆளாக்கப்படவிருந்த வழக்கில் நியாயமான நீதி வழங்கிய சென்னை உயர்தர நீதிமன்ற நீதிபதிகளை பாராட்டுவதுடன், தற்போதைய நியமன ஆதீன கர்த்தரான ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணியதேசிக பண்டார சன்னதிகள், தமது பதவியை காலிசெய்து தெய்வசம்பந்தமாகவே அந்த ஸ்தாபன ஆதீன கர்த்தராகவேண்டிய ஸ்ரீலஸ்ரீ. ரெத்தினசபாபதிதேசிகர் அவர்களைப் பண்டார சன்னதியாக இருக்கச்செய்து தம் கடமையை நிறைவேற்றுவார் என்று நம்புகிறது.

(அ) ஸ்ரீலஸ்ரீ. ரெத்தினசபாபதிதேசிகர் அவர்கள் மீது சந்தேக ஆஸ்பதமாகவோ, உண்மையானதெனத் தங்கள் செய்

கையை எண்ணியோ, நடவடிக்கை எடுத்துக்கொண்ட ஓர் சிலரிடம் பொது மக்கள் ஆத்திரங்காட்டாதிருக்குமாறு பிரார்த்திக்கிறது.

5. தற்போதைய தர்மபுரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பண்டாரசன்னதியவர்கள் தமதிடத்தைக் காலி செய்யாவிட்டால், பொதுமக்களின் மனக்கசிவிற்கும், தர்மசொத்தைக் காரணமின்றி உபயோகித்ததற்கும் காரணராவதுடன், அடியிற்கண்ட காரணங்களால், எங்கள் மத தலைவர்களுள் மற்ற இருமடாதிபதிகளும் (திருப்பனந்தாள். தருமபுரம்) ஸ்ரீலஸ்ரீ மடாதிபதிகள் அவர்களின் சிஷ்யகோடிகளும் தம்மை ஆதரிக்க மறுக்க கூடுமென்பதையும் அறிவிக்க விரும்புகிறது.

(அ) காலியான ஒரு ஸ்தானத்திற்கு நியாயமாய் வரவேண்டிய ஒருவர் வந்தால், அவர் மீது தொடரப்பட்ட ஒரு வழக்கில், அந்த இடம் காலியாகிறது. ஓய்வு கொடுக்கப்பட்ட அந்த ஸ்தானத்து அவசிய நிர்வாகங்களைக் கவனிக்க, தற்காலியமாய் ஒருவர் நியமிக்கப்படுகிறார். ஓய்வு பெற்றவர் (குற்றம் சாட்டப்பட்ட நிரபராதி) மீண்டும் வந்ததும், அந்த ஸ்தானத்திற்கு பாத்திரராகவேண்டுவது அவசியமானதாகும்.

(ஆ) இந்த நியாயம் தர்மபுரத்திற்கு மட்டும் அல்லவென்பதும், மற்ற மடங்களுக்கும் உண்டென்பதும் ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது.

(இ) ரோம் ஆட்சியின் சீர் குலைப்பிற்கும் கிறிஸ்தவ மதத்தின் பெயரால் மேல் நாட்டின் பிஷப்புகள் சீர்குலைந்ததிற்கும், அங்கு யேற்பட்ட எண்ணற்ற தீங்கிற்கும் காரணம், அங்குள்ள பாதிரிகளின் செல்வாக்குள்ள பெரும் ஸ்தாபனங்களில், தற்போதைய தர்மபுரம் நிலையேற்பட்டதேயாகும்.

6. நமது ஜில்லாவின் மடங்கள், ஆலயங்கள் முதலிய இந்து மத அபிவிருத்தி ஸ்தாபனங்கள், மீண்டும் தனது புராதன நிலையை அடையவும், தர்ம ஸ்தாபன சிகரங்களைச் சூழ்ந்திருக்கும் மாசுகளை நீக்கி "இந்துமத" பிரகாசத்தை வளர்க்கும் சிகரங்ளாக மாறுமாருசெய்யவேண்டுமென்ற "ஸமாஜ" லக்ஷியத்திற்கு சகல ஹிந்துமத கனவான்களும் உதவி புரிவார்களென நம்புகிறது.

7. நமது மாகாண விடுதலை கருதியுழைக்கும் தலைவர்களும், தர்மஸ்தாபனங்களைக் காக்கவே தாங்கள் சட்டமியற்றியதாய்க் கூறும் கட்சியாரும், இதில் ஆதரவு அளிக்கக்கடமை பட்டிருக்கிறார்கள் என்பதுடன், தேவஸ்தான ஆக்ட் சம்பந்தமாய் நாட்டில் தலைவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டகாலத்தில், மடங்களின் சீர் குலைப்பை ஒப்புக்கொண்டும், சீர்திருத்தத்திற்கு தக்க உதவி புரிவதாய் வாக்களித்திருப்பதையும் இப்பொழுது ஞாபகமூட்டுகிறது.

8. சமாஜ லக்ஷியத்தை தீவிரமாக பரப்புவதற்காக "சத்தியாக்கிரகி" என்ற ஒரு மாதாந்திர சஞ்சிகையை ஆரம்பிப்பதென்றும் அதைச்சிறந்த தேசபக்தரும், காராள திலகரும் மயூரமணி கார்குடி ஸ்ரீமான். ஆர். சின்னையா பிள்ளை அவர்களைச் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளுகிறது.

9. சமாஜ வருடாந்தக் கூட்டத்தை நாளது தைமாதத்தில் நடத்தி வைப்பதென்றும், அதற்கு சுவாமி சத்தியதேவர் லாலாஜி முதலிய தலைவர்களில் ஒருவரைக் கொண்டு நடத்தி வைப்பதென்றும் முடிவு செய்கிறது.

(10) தர்மபுரம் ஆதின கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ. ரெத்தினசபாபதி தேசிகர் அவர்களை நிரபராதி என்பதைக்கூறி அவர்மீது சுமத்தப்பட்ட குற்றம் அர்த்தமற்றதென்றும், தீர்ப்பளிக்குமாறு நியாதிபதிகட்கு எண்ணமுதிக்கச்செய்த இறைவனிடம், நமது சந்தோஷத்தை அறிவித்து தெய்வ பிரார்த்தனை செய்ய ஓர் தினத்தை சமீபத்தில் குறிப்பிடுவதென்றும், அன்று ஜில்லா முழுதும் சிறப்பாக, தெய்வபிரார்த்தனையையும், கூட்டத்தையும் நடத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

மற்றுமனேக விஷயங்களைப்பற்றி விவாதம் நடந்தபின் 6-30-க்கு தெய்வபிரார்த்தனையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது, என காரியதரிசி ஸ்ரீமான். S. வைத்திலிங்கம்பிள்ளை. நமக்கு எழுதுகிறார்.

---

## ஹிந்து மகாசபை,

### ஸ்ரீமான். லாலா லஜபதிராய் அவர்களுக்கு ஓர் பகிரங்க கடிதம்

அன்பார்ந்த ஐயா,

காயத்திரி, சந்தியாவந்தனம், யஞ்ஞோபவீதம் முதலான சடங்குகளை க்ஷத்திரியர், வைசியர்மட்டிலாவது அதை மதிக்க வேண்டுமென்று, பம்பாய் ஹிந்து மகாசபை தீர்மானம் செய்ததிலிருந்து மற்ற ஹிந்துக்கள், மேற்படி சடங்குகளுக்கு யோக்கியதையற்றவர்கள் என்று இதனால் ஒதுக்கித்தள்ளப்பட்டிருப்பதனாலும், தீண்டாதவர்கள வேதத்தைப் பாராயணம் செய்யவோ, செய்யும்படித்தூண்டவோ, ஹிந்து மகாசபை சார்பாக சனாதனிகள் பிரசாரம் செய்யக் கூடாதென்று, அதற்கு முன் கூடிய ஹிந்து மகாசபை நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து, இந்துக்களில் ஒரு சாரார் வேதத்தின் உயர்ந்த தத்துவங்களை அறியக்கூடாமல் விலக்கப்பட்டுயிருப்பதாலும், ஹிந்து மகாசபையின் பூர்வ நோக்கங்கள் வர்ணாசரம தர்மத்தின் கொடூர பாகங்களைத்தளர்த்தி, ஹிந்துக்களை ஒரு சமூகமாகத்திரட்டி, ஒற்றுமையையுண்டுபண்ணவும், தீண்டாமையை ஒழித்து இந்து வகுப்பில் உள்ள, சகல பிரிவினர்களுக்கும், சமஉரிமை அளிப்பது தான் என்றுபறைசாற்றிவிட்டு, அதே மூச்சில் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கோருவதை, நாளையதினம் முகமதியர்கள் நிறுத்திவிட்டாலும், இந்துமகாசபையை அழித்து விடுவதாய்த் தாங்கள் சொல்லுகிறபடியாலும், இந்து மகாசபையில் நிறைவேற்றியிருக்கும் மேற்கண்ட தீர்மானங்களாலும், பிராமணர்களது நன்மையின் பொருட்டு முகமதியர்களுக்கு விரோதமாய் ஹிந்துமகாசபை ஏற்பட்டதேயொழிய, சிதறிக்கிடக்கும் இந்துக்களை ஒரே சமூகமாய் நிர்மாணிப்பதற்கு அல்லவென்றும் இவைகளால் நிதர்சனமாய் விளங்குகிறது.

பிராமண செல்வாக்கை நிலைநிறுத்தவே இந்து மகாசபை தோன்றியிருப்பதாய் தமிழ் நாட்டில் உதித்திருக்கும் எண்ணம் நாளுக்கு நாள் பலப்பட்டுவருகிறபடியால், இந்து மகாசபையின்சூட்சிகளை தமிழர்கள் எதிர்க்க, முஸ்தீப்புகள் நடக்கும் என்பதைத் தங்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கோயமுத்தூர், பி. கே. பிள்ளை.

## சென்னை தேர்தல் கலவரம்.

சென்னையில் நடந்த கார்ப்போரேஷன் தேர்தல்களின்போது, கலவரங்களும், பலாத்காரச் செய்கைகளும் நடந்ததாக அவ்வப்போது பத்திரிக்கைகளில் காணப்பட்டு வந்தன. ஆனால் அவற்றின் உண்மையை ஜனங்கள் அறியாதபடி ஓர் கக்ஷியாரைப்பற்றியே குற்றமாய் நினைக்கும்படி சென்னை பிராமணப் பத்திரிக்கைகளும், சுயராஜ்யக் கக்ஷி பிராமணர்களும், சூழ்ச்சிப்பிரசாரம் செய்துவந்தனர். அதன்பின் இது சம்பந்தமாய் ஏற்பட்ட நீதிஸ்தலத்தின் விசாரணையின்போக்கைக்கவனித்தவர்களுக்கு பலாத்காரத்துக்கும், குழப்பத்திற்கும் யார் பொறுப்பாளிகளாயிருந்தார்களென்பது விளங்கியிருக்கும். சுயராஜ்யக் கட்சியார் மீது, மற்ற கக்ஷியார் சென்னை பிரசிடென்ஸி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடரப்பட்டிருந்த இரண்டு மூன்று விவகாரங்களின் முடிவினால் சுயராஜ்யக்கட்சியார்தான் அதற்குப் பொறுப்பாளிகளென்பதை விளக்கியிருக்கிறது.

அதாவது:—கொஞ்சநாளைக்குமுன் பைசலான ஒருவழக்கில் சுயராஜ்யக் கட்சியார் ஒருவர் மற்றக் கட்சியாரைபிடித்துத் தள்ளியதும், திட்டியதும் ருஜுவானபோதிலும், தேர்தல்களில் இவைகளெல்லாம் நடப்பது சகஜந்தானென தீர்ப்புச் சொல்லப்பட்டுவிட்டது.

மற்றொன்றில், அடைத்து வைத்தது பற்றி விஷயங்கள் தெளிவானபோதிலும், அதுவும் அவ்வளவு பெரிய குற்றமல்லவென்று தள்ளிவிடப்பட்டது.

மற்றொன்றில், எதிரிகள் தங்கள் நடபடிக்கைக்கு வருத்தப்படுவதினால் வழக்குத் தொடர்ந்தவர் வாபீஸ் வாங்கிக்கொள்ளவே எதிரிகள் விடுவிக்கப்பட்டனர்.

இவ்விஷயங்கள் இப்படியிருக்க, பொது ஜனங்களுக்கு ஒரே கட்சியார் பேரில் குற்றம் காணும்படியாக பிரசுரஞ்செய்த பிராமணப்பத்திரிகைகளின் சூழ்ச்சிகளை நினைக்கும் போது அவைகளுக்கு நம் நாட்டை ஆக்கவும், அழிக்கவும் சக்தியிருக்கின்றதென்பதை மறுக்க முடியாது. ஆதலால், பொது மக்கள் பிராமணப்பத்திரிக்கைகளின் விஷமப்பிரசாரங்களைக்கண்டு திடீரென்று ஒரு முடிவுக்கு வந்துவிடாமல், நிதானமாய் யோசித்து உண்மை அறிய பிரயத்தனப்படவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# காப்பி.

நமது நவீன நாகரீக ஆகாரங்களில் தலைசிறந்து நிற்பது காப்பி. இது மலைப்பிரதேசங்களில், உற்பத்தியாகும் ஒரு வகைச் செடியின் விதையால் செய்யப்பட்ட கஷாயம் என்பதை அறியாதாரில்லை. காப்பியை, பணக்காரர்கள் முதல் ஏழைகள் வரையுள்ள, ஸ்திரீகள், புருஷர்கள், படித்தவர்கள், படியாதவர்கள், உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், குடித்தனக்காரர்கள், மாணவர்கள் முதலான எல்லோரிலும், பெரும்பாலான மஹா ஜனங்கள் குடித்துப்பழகிய பானமாயிருப்பதால், அது இப்பேர்ப்பட்டது, இன்னமாதிரியானது, இப்படிச்செய்யப்படுவது என்று எவருக்கும் விசேஷமாய் அறிமுகம் செய்து வைக்க வேண்டியிராதென்று நினைக்கின்றேன். ஆயினும் அதைப்பற்றி சிலநாளாக குடிப்பவர்களின் கருத்துக்கு மாறுபட்ட அபிப்பிராயம், உலவுவதை நேயர்கள் அறிந்திருக்கலாம். காப்பி குடிப்பது நல்லதோ, கெட்டதோ அதைப்பின்னால் ஆராய்வோம். இக்கஷாயம் நம் நாட்டினர்கள் சென்ற சிலவாண்டுகள் முதலிருந்தல்லாமல், வேறெக்காலத்தும், காதால் கேட்டிராததும், வாயால்குடித்திராததுமான, நூதன குடிப்பழக்கம். நமது சமீபகாலத்துப் பெரியோர்கள் என்றும் கேட்டும், குடித்துமறிந்திராத, ஓர் அபூர்வமான ஆகாரம். இப்பொழுது நாம் தினந்தோறும் தவறாமல் காலை மாலைகளில் உபயோகிக்கும் காப்பி முக்கியமானதாக ஏற்பட்டிருப்பதை ஆராய்ந்தால், இச்சமீப காலத்துக்குள் எவ்வளவு மாறுதல்கள் உண்டாயிருக்கின்றதென்பது தெரியவருகிறது. இன்று எவனொருவன் தினந்தவறாமல் காலை மாலைகளில் காப்பி குடிப்பதில்லையோ அவன் சரியான நாகரீகமறியாதவனென்றும், எந்த வீட்டில் அடிக்கடி காப்பி காய்ச்சப்படுவதில்லையோ அவ்வீட்டார் நாகரீகமில்லாதவர்களென்றும், எந்தகிராமத்தில் காப்பிக்கடையில்லையோ, அந்த கிராமம் நாகரீகமில்லாதவர்கள் வசிக்கும் கிராமமென்றும், காப்பிக்குடியில் மதிமயங்கிய கண்யவான்கள் கருதுகின்றனர். சென்ற இருபதுவருடங்களுக்கு முன்னெல்லாம் நகரங்களிலிருக்கும் படித்தவர்களும், (இங்கிலீஷ்) அவர்களைச் சார்ந்தவர்களுமான வெகு சிலரே இதைக்குடித்துவந்தனர். இன்றோ பட்டிக்காட்டு குட்டி கிராமங்களிலுங்கூட காப்பி ருசிபார்த்தறிந்திராத மனிதன் கிடைப்பதரிது. ஐரோப்பியரின் ஒழுக்க வழக்கங்களே மிகச்சரியானது, அவர்களின் வார்த்தைகளே வேதவாக்கு, என்னும் நம்பிக்கை, சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் நம்மவர்களுக்கு மிகப்பலமாக இருந்ததால், அவர்கள் வழக்கப்படி நாமும் காப்பி குடித்துப்பழகுகிறோம். அவர்களிடமுள்ள அளவுகடந்த நம்பிக்கையால் இக்காப்பி நமது தேகநிலைமைக்கும், நாட்டின் சீதோஷ்ணஸ்திதிக்கும் தகுந்ததா, தகாததா வென்று ஆராயவில்லை. அக்குடிவழக்கம் நாளுக்கு நாள் ஏராளமாக வியாபகமடைந்து விட்டது. இப்பொழுது அநேகர்கள் தங்கள் அரிய சம்பாத்தியத்தின் ஒருபகுதியை காப்பி குடிப்பதற்கே செலவழிக்கின்றனர். நாளொன்றுக்கு எட்டணா, பத்தணா சம்பாத்தியமுள்ளவன்கூட காலை, மாலைகளில் காப்பிக்கடைக்குச்சென்று, குறைந்தது நாலணா செலவழிக்கின்றான்.

கள்ளுக்குடிப்பவர்களுக்கு அதோடு மாமிசப் பொரியல் (சாக்கனா) தேவையாயிருப்பதுபோல், காப்பிகுடிப்பவர்களுக்கும் காப்பியோடு ஏதாவது பலகார பக்ஷணங்கள் தேவையாயிருக்கின்றன. காப்பியும், கள்ளும் இப்படி இன்னும் சில அம்சங்களில் ஒத்திருக்கின்றன. கள்ளுக் கடையில் பலரும் ஒரே பாண்டத்தில் (மண் சொப்பு) ஒருவர் எச்சிலை, ஒருவர் குடித்து ஆநந்திக்கின்றனர். அதுபோலவே காப்பிக் கடையிலும் காப்பிக்கோப்பைகளை (டம்ளர்கள்) இரண்டொரு குடமளவு ஜலமுள்ள தொட்டியில் (எச்சில்கோப்பைகளை) அலம்பி எடுக்கப்படுகின்றன. அதனால் காப்பி குடிக்கும் எல்லோருடைய எச்சிலும் அதில் கலக்கப்படுகின்றன, மேலும் ஒரு நாளெல்லாம் ஒவ்வொரு தொட்டி ஜலத்தையே வைத்துக்கொள்ளுகின்றனர். இராமேஸ்வரத்தில் "கோடிதீர்த்தம்" இருப்பதாக கூறுகின்றனர்; அது போல காப்பிக் கடையில் எச்சில் அலம்பும் தொட்டிக்கும், அவ்வக்கடையின் குடியர்களின் தொகைக்கேற்றவாறு "ஆயிரம் தீர்த்தம்" இரண்டாயிரம் தீர்த்தமென்று சொல்வது பொருத்தமாயிருக்குமென்று நினைக்கிறேன். (இதனால் கோடிதீர்த்தத்தை அவமதித்ததாக நினைத்து விடாதிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.) சில கடைகளில் காப்பியை தூக்கிக் குடிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஆயினும், அக்கடைகளுக்குத் தூக்கிக் குடித்துப் பழகியவர்களே செல்வதென்பது முடியாதது.: கள் குடிப்பவர்களில் அநேகர்கள் அது தீமையானதென்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால், குடித்துப் பழகிவிட்டதால் அதை விடமுடிவதில்லை என்கின்றனர். அது போலவே காப்பி குடிப்பவர்களிலும் பலர், குடித்தபொழுது சுறுசுறுப்பைத்தருவதாயிருந்தாலும் நீண்ட நாள் பழக்கத்தால் தீமையே விளைந்தபோதிலும் பழகியவர்கள் லகுவில் விடமுடிவதில்லை என்கின்றனர். இவ்வாறு காப்பிக்குடியையும், கள்ளுக்குடியையும் ஒத்துக் கூறுவது அநேகருக்கு ஆத்திரந்தரலாம். கள்ளுக்குடியை பலநாளாகப் பலரும் பஹிரங்கமாய் கண்டித்து வந்திருப்பதால், அதைப்பற்றி எவ்வளவெழுதினும் எவரும் லக்ஷியமாய் செய்வதில்லை. காப்பிக்குடியோ இப்பொழுதுதான் எங்கோ சிலர் கண்டனம் செய்வதால், ஆரம்பத்தில் ஆத்திரமுண்டாக்கலாம். ஆயினும், இன்னும் சிலநாள் பலரும் இதைப்பற்றி கண்டனம் செய்யப்புகுந்தால், இதுவும் சகஜமான சமாச்சாரமாய் விடுமென்று ஆத்திரக்காரருக்கு ஆறுதல் கூறுகிறேன். கள்ளைவிட காப்பிக்கே அதிகப் பொருட் செலவும், தேகபிரயாசையும் உண்டாகின்றன. எவர்களைக் கண்டு காப்பி குடித்துப் பழகினோமோ, அவர்களே இப்பொழுதுகாப்பி தீமையானதென்றாலும் அதை விட முடியாதவர்களாயிருக்கிறார்கள். அநேகர் காப்பிக்குடியாமல் பிழைத்திருக்க முடியுமாவென்று கவலைப்படக்கூடிய நிலைமையிலிருக்கின்றனர். "தாகத்துக்கும் பிரசாதம்" என்பதுபோல், பலர் காப்பியே தங்கள் தேகசுகத்திற்கு தகுந்த ஆகாரமென நினைத்துக்கொண்டு அடிக்கடி அதைக்குடிக்கின்றனர் காப்பியை அளவுக்கு மிஞ்சிக் குடித்து, உடலும், வயிறும் பருத்து அசைந்தசைந்து நடக்கின்றனர். இன்னமநேகர், இதனால் நீரழிவு நோய்ப்பட்டு அவஸ்தைப்படுகின்றனர். இவ்வாறு காப்பிக்குடியால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்கள் பல. இனி இதன் குணதோஷத்தைச் சிறிது எழுதிவிடுவோம். காப்பியில் ஒரு வகை விஷத்தன்மை இருப்பதாலேயே அதைக் குடித்தவுடன் இரத்தவோட்டத்தால் நரம்பு கருக்கு முறுக்கேற்பட்டு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்குகிறது. குடித்த இரண்டொருமணி நேரத்தில் உற்சாகம் குன்றி நரம்புகள் தளர்ச்சியுற்று களைப்பை உண்டாக்குகிறது. குடித்தவுடன் அதனால் ஏதோ குணமிருப்பதாகத் தெரிவதாலேயே, அதன் மேல் பிரேமை அதிகரிக்கக்காரணமாயிருக்கிறது. சிலர் காப்பி தேகபுஷ்டி தருவதாக அபிப்பிராயப்படுகின்றனர். உள்ளபடி காப்பி அப்படி புஷ்டிதரக்கூடியதல்ல. அதோடு சேர்த்துக்கொள்ளும் பாலும்; சர்க்கரையுமே புஷ்டிதருகின்றன. இவைகளைச் சேர்க்காவிடின், காப்பியினால் தீமையேயன்றி எள்ளளவும் நன்மையில்லை. கபத்தை தீர்ப்பதில் காப்பி குணமுள்ளது. அற்பகுணமும், நிரம்பதீமையுமுள்ள ஒரு பதார்த்தத்தை உபயோகமானவைகளுள் ஒன்றாகச் சேர்ப்பது பொருத்தமாகாது. அதிக பழக்கத்தால் காப்பியை விடமுடியாதவர்களுக்கு அதற்குப் பதிலாக, அதன்ருசியில் குறைபாததும், குணத்தில் சிறந்ததுமான ஓர் முறையை மகாத்மா கூறுகின்றார். அதாவது, கோதுமையை காப்பி விதையைப்போல் வறுத்து, தூளாகச்செய்து கொண்டு வெந்நீரில் போட்டு சிறிது நெருப்பில் வைத்து, வேண்டுமானால் பாலும், சர்க்கரையும் சேர்த்துக் கொள்வது.

வெகு காலமுதல் நமது புராண சாஸ்திரங்களெல்லாம் கண்டித்திருப்பதும், எல்லோரும் பிரத்தியக்ஷமாய் தீமையானதென்றறிந்திருப்பதுமான, கள்ளுக்குடி ஒத்துழையாக்காலத்தில் ஓரிரண்டாண்டு ஓயாது பிரசாரம்செய்தும், ஒழியவில்லையென்றால் வெகுதூரம் (இங்கிலாந்து வரைச்சென்று) படித்துப் பட்டம் பெற்றவர்கள், பணக்காரர்கள், அறிவுள்ளவர்கள், வைத்தியர்கள், உத்தியோகஸ்தர்கள் முதலான கௌரவமுள்ள மேதாவிகளின் வயிற்றிலெல்லாம் புகுந்து பழகிய காப்பிக்குடி, எங்கோ திக்குக்கொருவர் செய்யும் பஹிஷ்கார கண்டனங்களுக்குப் பயப்பட்டு ஒழியவாபோகின்றது? பல பத்திரிகைகளும், பல அறிஞர்களும் பாடுபட்டாலன்றி, பொது ஜனங்களுக்குள்ளிருக்கும் இதைப்பற்றிய தப்பான எண்ணத்தை மாற்றுவது அசாத்தியமாகும்.

கடவுள் கருணை புரிவாராக.

கே. வ. இராமசாமி.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற மேற்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.



## உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.
ந. ராமசாமி
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்

## ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரகைஷயும்."

குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையம் பாலசந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்கு விபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

## இலங்கை நாட்டுக்கு நமது ஏஜண்டு.

இலங்கை நாட்டுக்கு நமது "குடி அரசு"ப் பத்திரிக்கையின் ஏஜண்டாக இருக்க கொழும்பு செட்டித்தெரு, 45-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள சுத்தக் கத்தர் ஜவுளி நிலையம், ஸ்ரீமான். பெ.பெரி. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களைக் கேட்டுக்கொண்டதின் மேல் அவரும் சம்மதித்ததால் அவரை நியமித்திருக்கிறோம். நமது பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்கள் அவரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்.

இனம்! இனம்!!

நூறு வருஷத்திய காலண்டரும், புஸ்தக சமாச்சாரங்களடங்கிய பத்திரிகையும் தபால் செலவின்றி அனுப்புவோம்.

ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் (P. O) சென்னை.

## "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.

வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்,
"தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி, ரங்கூன்.

## "தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடி யுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.

பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2-0-0
ஏனையோர்க்கு வருட சந்தா ரூ. 1-8-0

காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

## நவ இந்தியா.

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை.

ஆசிரியர்.
ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.

வருட சந்தா ரூ. 5.

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.

வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை,

கைமேல் பலன் கிடைக்கும்

இது ஹம்பக்கில்லை.

பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது

ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேசத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை காஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே இனாம் ஜாப்தாவுக்கு எழுதுங்கள்

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## விசேஷ அறிவிப்பு.

நமது "குடிஅரசு" பத்திரிக்கையை தென் இந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள மெஸர்ஸ் ஹிக்கின் பாதம்ஸ் கம்பெனியார்களின் புத்தகசாலைகளில், விற்பனைசெய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

☞ தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

விலை அணா ஒன்று

மானேஜர்.

## டைமண்ட் பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜ்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.